*Vol-2.]* *July, August—1912* *[No 11. 12.*

REGISTERED.

# THE GNANAPIRAKASAM.

A MONTHLY JOURNAL DEVOTED TO RELIGION, LITERATURE, SCIENEC &c

# ஞானபிரகாசம்.

யாழ்ப்பாணத்திற் பிரசுரமாகும்.

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம்—உ | யாழ்ப்பாணம்:—பரிதாவி வரு, ஆனி, ஆடி மீ. | இலக்கம்கக,கஉ.

## விஷயசூசிகை.


| | |
|---|---|
| கல்விகற்பிக்குமுறை | சி. தா. சிதம்பரப்பிள்ளை. |
| இடியுமின்னலும் | M M. Narayanasamy Iyer. |
| மனோதைரியத்துக்கும்பயத்துக்குங்காரணம் | ,, ,, |
| பழிவாங்குதல் | சோ. சிவஞானசுந்தரம். |
| ஜாவாத்தீவு | பத்திராதிபர். |
| இலங்கைக்குவேண்டிய—ரோககைவைத்தியசாலை | ,, ,, |
| கஞ்சவிழியரவு | ,, ,, |
| கொழும்புமுகத்துவாரம்சர்வார்த்தசித்திவிநாயகராலயம் | ,, |
| திருநல்லூர்வெள்ளியந்திருமலைகிழார் | ,, ,, |
| பெண்கள்கல்வி | நீலாம்பாள். |
| ஞானசாந்தி | மு. குருசாமிப்பிள்ளை. |
| சமதுபுராணேதிகாசவியல்பு | தமிழ்மாணவகன். |
| அன்னபூரணி | மா. சிவராமலிங்கம்பிள்ளை. |
| சமாசாரம் | பத்திராதிபர். |
| புத்தகவரவு | ,, ,, |


*B. M. A. Sanmugaretna Sarma Editor & Proprietor.*

ஆ. சண்முகரத்தினசர்மா, பத்திராதிபர்.

யாழ்ப்பாணம் "கணேச" யந்திரசாலை

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி : : சுன்னாகம்,
இலங்கை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எமதுஞானப்பிரகாசத்தைப்பற்றி

முல்லைத்தீவு, தபாலாபீசுத்தலைவரும் (*Post Muster*) செந்தமிழ்யாப்பிலக்கண விதுரரும் ஆகிய ஸ்ரீமான். சி. பரமநாதபிள்ளையவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றது.

பொன்பூத்தநறுமணப்புதுமதுவமலரடவிபொலிவுகாட்டுந்
தென்பூத்ததமிழெனுந்தேனின்றுகுதிகொழுந்திகழ்வண்ணையில்
மன்பூத்தசண்முகவிரத்தினச்சர்மாமாதாந்தபத்திரிகையாய்
மின்பூத்தகதிரன்னஞானப்ரகாசத்தைமேதினியில்வெளிவிட்டது.

திங்களொடுகங்கையணிதிருமறைக்காடன்றிருப்புகலிக்கின்ற
மங்குபெருஞானமருள்சைவநெறிமறையோடுவெண்டமிழையும்
பொங்கிவளர்விக்குமுறையாதலாற்பொருளீந்துபோற்றலைநயவார்
துங்கமிகுகல்விப்பெருங்கடல்கடந்திடுதுணைப்புணைக்கே

யாழ்ப்பாண அரசாங்கநியாயதலத்திலிகித உத்யோகத்திலிருந்தவரும். ஐரோப்பியதுரைமக்களுக்கு வடமொழியுந் தென்மொழியுங் கற்பித்துவருமாசிரியரும் ஆகிய யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை பிரமஸ்ரீ. S. P. காசிவிசுவநாதையர். சண்முகஐயரவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றது.

சகலவிநூதபாவஞ்சச்சிதாநந்தபாவஞ்
சுகிர்தகவிவிநோதஞ்சுந்தரஞ்சுப்ரசந்நம்|
புவிகிரணவிசேஷம்நாமஞாநப்ரகாச
மகிலதிமிரநாசஞ்சற்சனைர்வந்திதாஹம்.

ததாவிதேநபவிதாரசிதாஸ்பத்ரிகாசதா.
ஜநாநாம்ஞாநபாவாத்தஞ்சண்முகரத்நசர்மணா.

வெண்பா.

ஞானப்ரகாசமெனச்சாற்றுநல்லபத்திரத்தால்
ஞானம்ப்ரகாசிக்கநல்கினான்—ஊற்றினத்திற்
சண்முகரத்நசன்மன்சாதுசங்கமுற்றவிது
பண்புடையோர்கொள்கபரிந்து

உ

# ஞானப்பிரகாசம்.

யாழ்ப்பாணத்திற் பிரசுரமாகும்

## ஒருமாதாந்தத்தமிழ்ப்பத்திரிகை.

"தோட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு." திருக்குறள்.

புத்தகம்—௨.

1911 ம் ௵ ஆவணி ௴—1912 ம் ௵ ஆடி ௴

ஆ. சண்முகரத்தினசர்மா
பத்திராதிபர்

குமாரசுவாமிப்புலவர் நூல
புலவகரகம்,
மயிலணி : : சுன்னாகம்,
இலங்கை.

வண்ணைமாநகரம்,
"கணேச" யந்திரசாலை.
விலை ரூபா—3.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஞானப்பிரகாசம்.

## யாழ்ப்பாணத்திற் பிரசுரமாகும்

## ஒருமாதாந்தத்தமிழ்ப்பத்திரிகை.

"தோட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு." திருக்குறள்.

புத்தகம்—உ.

1911 ம் ௵ ஆவணி௴—1912 ம் ௵ ஆடி௴.

ஆ. சண்முகரத்தினசர்மா
பத்திராதிபர்

வண்ணைமாநகரம்,
"கணேச" யந்திரசாலை.

விலை ரூபா—3.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானப்பிரகாசம்.

"தோட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு" திருக்குறள்.

மாதம் ஒருமுறை பிரசுரமாகும்.

| புத்தகம்—உ | யாழ்ப்பாணம்:—பரிதாவி ௵, ஆனி, ஆடி ௴. | இலக்கம்கக,கஉ. |
|---|---|---|

உ

கணபதிதுணை.

மந்திரநான்மறையாகிவானவர்
சிந்தையுணின்றவர் தம்மையாள்வன
செந்தழலோம்பியசெம்மைவேதியர்க்
கந்தியுண்மந்திரமஞ்செழுத்துமே.

## தமிழ்த்தெய்வவணக்கம்.

மறைமுதற் கிளந்த வாயான்
    மதிமுகிழ் முடித்த வேணி
யிறைவர்தம் பெயரை நாட்டி
    யிலக்கணஞ் செய்யப் பெற்றே
யறைகடல் வரைப்பிற் பாடை
    யனைத்தும்வென் றாரி யத்தோ
டுறழ்தரு தமிழ்த்தெய் வத்தை
    யுண்ணினைந் தேத்தல் செய்வாம்.

## கல்விகற்பிக்கும்முறை.

(௪0ஆ—ம் பக்கத்தொடர்ச்சி.)

மேலேகாட்டப்படாத ஒழுக்கம் செல்வம் தெய்வபத்தி பெரியோர்பத்தி இராசபத்தி குருபத்தி தைரியம் என்பன அவர்கள் புதியமுறையெனக்கருதிய வசனபாடம் முதலியவைகளைமாத்திரம் கற்பவர்க்கும், பழையமுறையெனக்கொண்ட இலக்கிய இலக்கணங்களை மாத்திரம் கற்பவர்க்கும், சிறிது உண்டாதல் கூடுமேனும், அவற்றோடு இதிகாசம் சுகாதாரம் பூமிசாஸ்திரம் இயற்கை அவதானம் முதலாம் சாஸ்திரங்களையுங் கற்பவர்களுக்கே இவை விசேடமாக அமையப்பெறும். இவை போதனைமாத்திரையாயிருக்கினும் சாதனையாயிருத்தல் பெரிதும் உபயோகப்படுமன்றோ. சாதனை இல்வழிப்போதனையாற் பயனின்றென்பதை "ஏட்டுச்சுரைக்காய் கறிக்கு உதவாது" என்பதால் உணர்க. அன்றியும் பெருநாவலர் தம்மிடத்து இல்லறம் துறவறம் என்னும் இரண்டனுள் எது சிறந்தது என்பதை அறியவிரும்பிச் சென்றொருவனுக்கு இல்லறமே சிறந்தது என்பதைச் சாதனையாற் காட்டினரேயன்றிப் போதனையாற் காட்டினாரல்லர். இங்ஙனமே தருமபுத்திரர் அரிச்சந்திரன் என்போரும் பொறுமை சத்தியம் என்பவற்றின் உயர்வைச் சாதனையாற் காட்டினர். இவை நாம் முன்னர்க்கூறியதற்குத் தக்க சான்றாயமைதல் காண்க.

ஆதலால் உபாத்தியாயர்கள் மேலே கூறிய தெய்வபத்தி முதலியவற்றைப் போதனையால் வளர்க்க வேண்டுமென்ற எண்ணத்தை ஒழித்து, தம்மையும், தந்தைதாயர் முதலாம் பெரியோரையும் அநுசரித்து ஒழுகுமாறு மாணவர்களைப்பயிற்றல் வேண்டும். மாணவர்களை ஒழுக்கமுடையராக்கலும் கற்பித்தலினோரங்கமாதலின் அஃது ஈண்டைக்கு வழுவாகாதென்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷயகாரர் முதலில் ஒலிவடிவிலும் வரிவடிவிலும் அக்ஷரப்பயிற்சி செய்யவேண்டுமென்றனர். அதாயின்னொர்ச்சிறப்பாகக் கூறப்படும். ஆண்டு அதுதக்கமுறையா அன்று என்பதை உணர்க. சமீபக்கற்காலம் அக்ஷரப்பயிற்சிசெய்யும் வகையைக் குறித்துச் சிறிது ஆராய்வாம். 'அ' 'ஆ' என்ற எழுத்துக்களின் தனி ஒலிவடிவையே கற்பிக்கப்போந்த தற்கால ஆசிரியர்கள், அவற்றிற்குரிய ஒலிகளை அறிவித்தற்குப் பதிலாக 'அனா; 'ஆவன்னா' என்ற உரியனவல்லாத பல ஒலிக்கூட்டங்களை அறிவிக்கின்றனர். முதலிற் கற்கும் எழுத்துக்களின் நிலையும் அவற்றைப்பற்றிய அறிவும் இவ்வாறாயின் பிள்ளைகளுடைய கல்வித்தேர்ச்சியும் அறிவும் எவ்வாறாகும் என்பதை அறிஞர்களாயுள்ள ஆசிரியர்கள் ஆலோசிப்பார்களாக.

பிள்ளைகளுக்கு முதலிற் படிப்பிக்கப்படும் எவையும் பிழைபற்றனவாயிருத்தல் வேண்டும்; இளமையிற் கல்வி சிலையிலெழுத்துப்போலழியாதாகலின். இளமையிற் கற்றவற்றுட் சில அறிவுவருங்கால் பிழையெனத்தெரியப்படுமாயின், ஏனையவுமிவ்வாறாகுமோவென்று மாணவர் ஐயுற்றுத் தாம் கற்றவைகையிற் றன்புறுவாரன்றோ. பாலர்களுக்கு அக்ஷரப்பயிற்சிசெய்யுங்கால் எழுத்துக்களின் ஒலிவடிவையும் பிழைபறப்பயிற்றல் ஆசிரியர்களுக்கு முக்கியகடமையாம்; இளமையிற்கற்பிக்கவேண்டியன பிழைபற்றனவாயிருத்தல் வேண்டுமாதலின்.

பாலர்கள் தினந்தோறும் சொற்களமைந்த வசனங்களைப் பேசிவருதலினாலும், சொற்களையும் பொருட்களையும் அறியும் ஆற்றலையுடையராயிருத்தலினாலும், எழுத்துக்களினும்பார்க்கச் சொற்களையுச்சரித்தல் அவர்களுக்கு இலகுவாயிருத்தலினாலும், அறிந்தவற்றைக்கொண்டு அறியாதவற்றை அறிவித்தல் தக்க ஆசிரியமுறை ஆகலானும் அறிந்தசொற்கள் மூலமாயாதல் பொருட்கள் மூலமாயாதல் எழுத்துக்கள் படிப்பிக்கப்படல்வேண்டும். சொற்களையின்றி எழுத்துக்கள் படிப்பித்தல் தக்கமுறையன்று. சொற்களையின்றி எழுத்துக்களைத் தனியேகற்பித்தல் பண்டையாசிரியர்கட்கும் கருத்தன்மையென்பது அவர்கள் நூலானுணரப்படும். மெய்கள் தாமேதனித்துநின்று உச்சரிக்கப்படாதன வாங்கருத்தன்றோ, ஆசிரியர் தொல்காப்பியனார் "மெய்யினியக்கமகரமொடு சிவணும்" என்றும், பவணந்திமுனிவர் "மெய்களகரமும்" என்றும் கூறியிருத்தலைநோக்குக. அன்றியும் "மெய்யினை யேவ அரைமெ மொழிப" என்னுந்தொல்காப்பியச் சூத்திரத்திற்கு அதனுரையாசிரியராகிய உச்சிமேற்புலவர்கொள் நச்சினார்க்கினியர் "அவ்வமைத்திரையுந் தனித்துக்கூறிக்காட்டலாகாது; நாச்சிறிதுபுடைபெயருந்தன்மையாய் நிற்றலின். இனி அதனைச்சில மொழிமேற்வைத்துக் காக்கை கோங்கு கவ்வை எனக்காட்டுப" என்றெழுதியிருக்கலும் தக்கசான்றாய் அமைந்து யாம் கூறியதை இகந்துபடாமற்காக்குமன்றோ!

சொற்களோடும் பொருட்களோடும் சம்பந்தப்படுத்தாமல் ஒரேசமயத்திற் பல எழுத்துக்களை வாளாகெட்டுருப்பண்ணுவித்தலினாலும், சுட்டுவிரல்தேய நிலத்தைத் தேய்ப்பித்தலினாலும் பாலர்களிடத்துப் புதிதாய் உற்பத்தியாகும் உணர்ச்சியாதோ? இதனால் அவர்கட்குக் கல்விச்சுவை கெடுதலன்றி அடையும்பயன் வேறொன்றுமில்லை. எழுத்துக்களைத் தனியேபடிப்பித்தலினும் பொருட்களையும் சொற்களையும் எழுத்துக்களையும் ஒருசேரப் படிப்பித்தலால் மாணவர் பெரிதும் பயனடைவாரன்றோ? தக்கஆசிரியர்கள் பாலர்கள் குறிக்கப்பட்டநேரத்தில் கொள்ளுமளவையுத்தியாலும் அநுபவத்தாலும் உணர்ந்து அவ்வளவு எழுத்துக்கள் அமைந்த சொற்களையே படிப்பித்து அவற்றை மனனஞ்செய்விப்பர். இங்ஙனம் கற்பிக்குமிடத்துச் சிலபிரமாணங் கவனிக்கப்படல் வேண்டும். அவை வாசனைகற்பிக்கும்முறையில் விரித்துக்கூறப்படும். ஆங்குக்காண்க. காட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டியவாறு ஒருமொழி தொடர்மொழிகளைக் கற்பிக்குங்கால் பாலர்கள் நெடுங்கணக்கின் எழுத்துக்களை அறியப்பெறுவார்கள். ஒருமொழி தொடர்மொழிகளை வாசிக்கப் பயிற்றியபின் தனிவசனம் தொடர்வசனம் வண்ணப்பியாசம், நீதிநூற்செய்யுள் இயற்கைப்பொருளுவகான பாடம் பூமிசாஸ்திரம் இலக்கணம் இதிகாசம் சுகாதாரம் முதலாங்கலைகளைத் தக்கமுறைப்படி கற்பித்தல் வேண்டும்.

இவையாவையும் கற்பதனால் ஆகும் பயனியாது? இலக்கிய இலக்கணம் மாத்திரம் கற்றால் அமையாதா? நம்முன்னோரிற் பலர் இலக்கிய இலக்கணமாத்திரங் கற்றுப் புலமையையுடையவர்களாயிருந்தார்களல்லவா? எனச்சிலர் வாதிப்பர். அஃது அங்கீகாரமாகாது, ஆராயுமிடத்துத் தக்கபுலமையுடையவர்களாயிருந்தார்களென்பது தெளிவுபடுதலின் நம தமிழை வளர்த்த புலவசிகாமணிகள் இலக்கிய இலக்கணங் கற்றலொன்றே ஒருவரும் கூறப்புகாராகலின் சுருக்கி அவற்றை எடுத்துக்காட்டாது மற்றையபகுதிகளை எடுத்துக்காட்டுதும்.

(வரும்)

இங்ஙனம்,
சி. தா. சிதம்பரப்பிள்ளை,
உபாத்தியாயர்.
அரசினராசிரியகல்லூரி.

## இடியும் மின்னலும்.

மின்னலென்பது மேகத்தினின்றுஞ் சீக்கிரமாக உண்டாகி வேறுமேகத்தின்பேரிலாவது பூமியிலாவதுபாய்ந்து உடனேமறைந்துபோகும் ஓர் ஒளி. மின்னலையுண்டாக்கும் பொருள் மின்சாரம். இது அறிவுக்கெட்டாததாய் பலவிஷயங்களில் திரவத்தையொத்த ஓர் சத்தாகவிருக்கின்றது. இது எல்லாப்பொருள்களிலுமிருக்கின்றது அது அநேகமாக நமது இந்திரியங்களுக்குப்புலப்படாது. அது ஒன்றில் அதிகமாகச்சேரவும் மற்றொன்றில் குறையவுங்கூடும் அப்படி அதிகமாகச்சேர்ந்திருக்கும் ஒரு பொருளும் குறைந்திருக்கும் மற்றொரு பொருளும் சமீபிக்கும்போதாவது அல்லது அவ்விரண்டுகளும் மின்சாரத்தைவாங்கத்தக்க சிலவகைப்பொருள்களால் ஒன்றாகச்சேர்க்கப்படும்போதாவது அதிகமாயிருக்கும் பொருள்களினின்று குறைந்திருக்கும் பொருளுக்கு மின்சாரம்பாய்கின்றது. அப்படிப்பாயும்மின்சாரம் அளவில் அதிகமாயிருந்தால் ஒருநெருப்புச்சட்டியாவது ஒரு பெரியதீக்கொழுந்தாவது ஒரு பொருளினின்று மற்றொருபொருளுக்குப் பாய்வதுபோலத் தோன்றும்.

மின்னலானது ஒருமேகத்திலிருந்து மற்றொருமேகத்திற்காவது அல்லது மேகத்திலிருந்து பூமிக்காவதுபாய்ந்து சிறிதுபொழுதிற் கெல்லாம் ஓர் சப்தம் உண்டாகிறது. அதைத்தான் ஜனங்கள் மேககர்ச்சனை அல்லது மேகமுழக்கமென்றுசொல்லுகிறார்கள். வெளிச்சம் அதிகமாகப்பரவுவதினால் மின்னல்வெகுதூரத்தில் உண்டானபோதிலும் நம்முடையகண்களுக்குப்புலப்படுகின்றது. சத்தம்அப்படியல்ல. சத்தம்பரவுவதற்குச்சிறிதுநேரம்செல்லும் வெளிச்சம் ஒருசெக்கண்டிற்கு சுமார் 196`00, மைல்தூரம், பரவும். சத்தமோ ஒருசெக்கண்டிற்கு 1115 மைல் தூரம்பரவும். அதாவது சத்தத்தைக் காட்டிலும் வெளிச்சம் 9, 00 000. மடங்கு அதிகவிரைவாகப்பரவும். ஒரு பீரங்கிசுடப்பட்டவுடனே சத்தமும் வெளிச்சமும் ஏககாலத்தில் கிளம்புகின்றன. அதன்வெளிச்சம் கண்ணிற்குத்தெரிந்து சிறிதுகாலத்திற்குப்பின்தான் சத்தம் தூரத்தில் இருக்கிறவர்களுக்குக் கேட்கும். ஒருவன் கோடாரியினால் மரத்தைவெட்டும்பொழுது நாம் சமீபத்திலிருந்தால் அவன்வெட்டுங்காலத்திலேயே சத்தம்நமக்குக்கேட்கிறது. நாம் தூரத்திலிருந்தால் கண்ணிற்குப்புலப்பட்டுச் சிறிதுநேரத்திற்குப்பிறகுதான் சத்தம் கேட்கிறது. மின்னலும் சத்தமும் ஒரேகாலத்தில் உண்டாயிருந்தபோதிலும் மின்னலைப்பார்த்துச் சிறிதுகாலத்திற்குப்பிறகுதான் சத்தம்கேட்கப்படுகிறது. மேலேமின்னலின் உற்பத்திசொல்லப்பட்டது. இடிமின்னலாயிருக்கும்பொழுது செய்யவேண்டியதென்னவென்றால் முக்கியமாய் காந்தமுள்ளவஸ்து இருக்குமிடங்களில் இருக்கக்கூடாது.

## மனதேஜயத்துக்கும் பயத்துக்கும் காரணம்.

மனிதனுக்குத்தைரியம் அவசியம், தைரியமில்லாமல் ஜீவிப்பதுகஷ்டம். முன்னொருகாலத்தில் ஓர்வேளாளன் ஓர் சோளத்தோட்டம் விருத்திசெய்துவந்தான். அந்தச்சோளத்தோட்டத்தை அவன் பிரதிதினம் மாலைதோறும் சுற்றிப்பார்ப்பதுவழக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம். இப்படி அவன் விருத்திசெய்துவருகையில் சோளப்பயிர்கள் கதிர்விட்டன. கதிர்கள்முற்றியிருக்கும்பொழுது ஓர் நாள் இராத்திரி 8 மணிக்குப்போனபொழுது ஓர் நாகம் அவனைத்தீண்டிற்று. அதைஅவன் லக்ஷியம்செய்யாமல் சோளப்பயிர்காலில்குத்திவிட்டதென்றுநினைத்துப் பேசாமலிருந்தான். மயக்கம்முதலானதொன்றும் உண்டாகவில்லை. மறுநாளும் அப்படிச்சுற்றிப்பார்க்கும்பொழுது அந்தஇடத்தில் பாம்புஇருக்கக்கண்டு மூர்ச்சையை அடைந்தான். மயக்கம் உண்டாயிற்று இன்னும் அநேகஅடையாளங்கள் காணப்பட்டன. பிறகு 4 5. தினம்வரையில் உடம்பு அசாத்தியமில்லாமல் பிறகு மருந்துசாப்பிட்டுத்தெளிந்தது.

ஆங்கிலேயநாட்டில் ஓர் ஸ்திரீக்கு இரணவியாதியாயிருந்தது அதற்குஅவள் டாக்டரிடத்தில் கைபார்த்துக்கொண்டாள். டாக்டர் அதற்குஉள்ளுக்குச்சாப்பிட ஒருபோத்தலில்மருந்தும் வெளிக்குப்போடப் பாஷாணங்கலந்த மருந்துப்போத்தலுங்கொடுத்துவெளியிற்போடுகிறமருந்துப்போத்தலுக்குச்சிகப்புத்தாள்ஒட்டியிருக்கிறதுசக்கிரதையென்றுசொல்லி அனுப்பிவிட்டார். பிறகு அவள் அம்மருந்தை வெவ்வேறுமாடங்களில் அடையாளமாகவைத்துச்சாப்பிட்டுவரும்பொழுது ஓர் நாள் அவள் சகோதரன் மருந்துசாப்பிட்டபிறகு பாஷாணமருந்துப்போத்தலை உள்ளுக்குச்சாப்பிடுகிற மருந்துவைக்கிறமாடத்திலும் பாஷாணமருந்துவைக்கிறமாடத்தில் உள்ளுக்குச்சாப்பிடுகிறமருந்தையும் வேடிக்கையாகவைத்தான். அதைப்பார்த்து, பாஷாணத்தைச்சாப்பிட்டுவிட்டேன் ? நான்நிச்சயமாகச்சொல்லுவேனென்று கீழேவிழுந்து, மூர்ச்சையை அடைந்தாள். பிறகுவைத்தியர்கள் கைபார்க்கும்பொழுது விஷத்தைச்சாப்பிட்டகுறிகள் காணப்பட்டன ; உடனே சகோதரன் நான்தான்விளையாட்டாகவைத்தேனென்று என்னசொல்லியுங்கேளாமல் 4. 5. தினத்திற்குப்பிறகு சமாதானமடைந்தாள் இந்தஉதாரணங்களாலேயே மனதேபயத்துக்கும் ஐயத்துக்குங்காரணமென்று வாசகர்களுக்குப்புலப்படும். ஆகையால் என்னபயம்வந்தபோதிலும் தைரியத்தைக்கைவிடாமலிருந்தால் ஜயத்தைஅடைவோம்.

இங்ஙனம்,

M. M. Narayanasamy Iyer
*Tamil & Sanskrit Pandit*
TANJORE.

## பழிவாங்குதல்.

(௧௧௫-ம் பக்கத்தொடர்பு)

தோம் :—கனம்பொருந்திய ஐயாவே! தங்கள் அருமைக்குமாரியும் எனது பிராணநாயகியாகவாயிருப்பவளுமாகிய இம்மங்கை நாயகத்தை மரியாதையின்றி அவதூறுபேசி இகழ்வது சரியன்று.

வில்லியின்பிதா :—(கெஞ்சினங்கொண்டு) மரியாதையில்லாத அற்பவைத்தியனே ! யாது கூறினாய் அடகிழ்மகனே ! பிதாவாகிய என்னுடைய உத்தரவின்றி இவளுடன் விவாகம்பேசி முத்தமிட்டபடியால் உனக்கு நல்லபாடம்படிப்பிக்கின்றேன் என்று கையிலிருந்தகுறுந்தடியைச்சுழற்றி ஓங்கி அவனது தலையில் அடிக்கவந்தான்.

அப்பொழுது "தோம்" தனக்கு இயல்பாயமைந்த இரக்கத்திற்குச் செலவுகொடுத்துவிட்டுக் கோபமென்னும் கொடியனை அணைத்துக்கொண்டு உறையிற்கிடந்தவாளையுருவிப் பின்வாங்கிச்சுழற்றி அவனது முகத்துக்குநேரே நீட்டினான். அதைக்கண்ட 'வில்லி' நடுநடுங்கி ஒருவிதமான தைரியங்கொண்டு தனதுகையினால் அவன்தாங்கியிருந்தவாளைத்தட்டிவிட்டு அன்பானதோமே! என்னகாரியம்செய்ய எத்தனித்தீர் கோபம் சண்டாளனல்லவா ! உமக்கென்னதைத்தியமா ! எனது அருமைப்பிதாவைக் கொன்று என்னைக்கைப்பற்ற நினைத்தீர்போலும். நல்லவேளை சர்வேஸ்வரனே துணைசெய்தார். இல்லாவிட்டால் தந்தையாரையும் இழந்து நீரும் கொள்ளைக்கயிற்றால் தூங்குவதைக்கண்டு பாவி பதைபதைத்துமடியவா? தயவுசெய்து எனக்காகக் கோபத்தை விட்டுச் சாந்தமடையும் என்று குயிலும்நாணும்படி கூறிக் கண்ணீர்சிந்தினாள்.

தோம் :—கோபத்தோடு அன்பானவில்லியே ! நான்உன்னைக் கைப்பற்றுவது மிக அரிதாகத்தானிருக்கின்றது. மானுபிமான முள்ள நான் அற்ப ஒரு எளியவன் தண்டிக்கப்படுவதுபோலக் குறுந்தடியால்மோதப்பட்டு நிற்கட்டுமா ? நீ கூறுவது சரிதானோவென ஆலோசித்துச்சொல்லு என்றான் அப்பொழுது;

வில்லியின்பிதா :—அன்பான வாலிபனே. உன்னைநான் குற்றம்சொல்லவில்லை உனதுதைரியவீரபராக்கிரமத்திற்கு மெச்சினேன். உனது பிதா எனது உற்றசிநேகராயிருத்தலால் நீ செய்த குற்றத்தை மன்னித்தேன். நான்கொண்டகே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தின் பெருக்கத்தினால் உன்னை அவதூறுபேசிவிட்டேன். ஆயினும் நீ வில்லியை வதுவைசெய்வதில் எனது தீர்மானத்தை முன்சொன்னதுபோலவே சொல்லுகின்றேன், இப்பெண் உனக்கல்ல. நீ இவளை இனிமேல் விரும்பக்கூடாது. நீங்கள் இருவரும் ஒருவரையொருவர் காண்பதும் முத்தமிடுவதும் நான்காணக்கூடாது. நான் நாளையதினம் உனது தந்தையாரிடம் இதைப்பற்றிப்பேசுதல்வேண்டும். நீ போகலாமென்றான்.

தோம்:—ஐயாவே! நேரமாய்விட்டது. நான்சொல்லுகின்றேன். ஆனால் இன்னும் உம்முடையமகளை எனது மனையாள் என்றழைக்க நான் சீவனுடன் இருப்பேனென்று நம்புகின்றேன் என்றுகூறி என்அன்பான வில்லியே! வந்தனம் நான் சென்றுவருகின்றேன் என்றான்.

வில்லி:—அழுதுகொண்டு! என்பிராணநாதரான தோமே! வந்தனம், சென்றுவாரும். அடியாளைமறக்கவேண்டாம் அடியாள்செய்த சத்தியத்தை மறக்கமாட்டேன். இது திண்ணம்.

என்று இவ்வாறு கூறித் தோமுக்கு உத்தரவுகொடுக்க அவன் வில்லியைப்பிரியமனமில்லாமல் அரிதில் அவ்விடம்விட்டுநீங்கினான். வில்லியின்பிதாவாகிய "போஸ்" என்பவனும் தனது குமாரியை அழைத்துக்கொண்டு தனதுவீட்டுக்குச் சென்றுவிட்டான்.

தனதுபிராணநேசியாகிய வில்லியிடம் உத்தரவுபெற்றுச் செல்லும் தோம் தங்களிருவரின் இடையறாப்பெருங்காதலையும் அவளின் தந்தையார் தன்மீது கொண்டகோபத்தையும் பின்சாந்தமானதையும் தானவளை வதுவைசெய்வதற்கு விருப்பமில்லாதிருப்பதையும் நினைந்து நினைந்து துக்கமும் சந்தோஷமுமுடையவனாய்ச் சிறிதுதூரம் செல்லும்போது தான்முன்னே மரத்துடன்பிணித்துக்கட்டிவிட்டுவந்த ஸ்பானியனின் நினைவு உண்டாக. முன் வில்லியைச்சந்தித்தற்கு எவ்வளவு வேகமாகச் சென்றானோ அவ்வாறு ஓடிப்போய் அந்த ஸ்பானியனைக்கட்டிவைத்த இடத்திற்பார்க்க அவ்விடத்து அவனைக்காணாமையினால் திடுக்கிட்டு அடடா! பரமசண்டாளனை யாரோ அவிழ்த்துவிட்டனரே! நான் மோசம்போயினனே என்றுகூறிச் சோகவாரிதியில் மூழ்கிப் பின் ஒருவாறு தேறிச் சுற்றுமுற்றும் ஓடிச்சென்றுபார்க்கச் சிறிது தூரத்தில் ஓர் சிறுகுடிசையில் முன்தனக்கு அறிமுகமானவனும் "மினிஸ்" என்னும் பெயரையுடையவனுமாகிய ஒரு கிழவன் வசிக்குமிடத்தை அடைந்து "அந்த ஸ்பானியனைப்பற்றி விசாரித்தபோது கிழவன் ஐயா! அவனுடையசம்பவம் ஒன்றும் எனக்குத்தெரியாது என்னைக்கெஞ்சி மன்றாடி அழுதுபுலம்பி ஒரு ரூபாவும் தந்தான் ஆகையினால் கட்டைஅவிழ்த்து விட்டுப் போகும்படிசெய்தேன் எனலும் அப்பொழுது "தோம்" மூடமதியுள்ள முழுமகனே! ஒரு ரூபாவுக்காக எமதுதேசத்துக்கு அன்னியனும் பலசனத்துரோகியுமாகிய அவனை விடுவித்துவிட்டாய் உன்மதியிருந்தவாறென்னை அவன் இவ்விடம் விட்டுநீங்கி ஒருமணிநேரம் இருக்குமென்று கூறுகிறாய். ஏது நான் அவனைச்சந்தித்துக்கொள்ளமாட்டேன் அந்த ஸ்பானியத்திருடன் எதுவிதமும் என்னைக் கொலைசெய்துபோடுவான். இனியென்ன செய்கிறது நடக்கிறது நடந்தேதீரும் என்றுகூறி அவ்விடம்விட்டு வரும்பொழுது ஒரு நாற்சந்தியில் வெண்மையான ஒரு போர்வைகிடக்கக்கண்டு அதைத் தனதுவாளினால் எடுத்துப்பார்த்தபோது அது அவனுக்கு அறிமுகமுடையதாகக் காணப்பட ஆச்சரியமுற்று அந்த ஸ்பானியனைப்பற்றியும் அவன் தன்னுடையபெயர் கேட்டமாத்திரத்தில் நடுக்குற்றுப் பின் தன்னிற்சருவியதைப்பற்றியும் கீழேகண்டெடுக்கப்பட்டபோர்வை அவ்விடத்துக் காணப்பட்டதைப்பற்றியும் பலவாறு ஆலோசித்துச்செல்லும்பொழுது அப்பாதையில் ஒரு விநோதமான அடிகாணப்பட்டது. மழைபெய்திருந்தபடியால் அவ்வடி நன்றாகவிளங்கியது. அதைக் கூர்ந்துபார்த்தான். அது அவனது மாதாவின் அடிபோலக்காணப்பட்டது. அதைக்கவனித்துக்கொண்டு வியப்போடு செல்லும்பொழுது இன்னும் சிறிதுதூரத்தில் அதன்பின் வேறொரு பெரும் அடியும் சென்றிருக்கக்கண்டான். ஆனால் அவ்வடிகள் ஒன்றின்பின்னால் ஒன்று செல்வதும் பலஇடத்திற் சிந்து சிந்து இழுபட்டிருக்கவும் கண்டு மனம்பதறித் தேகம் நடுநடுங்க ஐயகோ! நான்வழியிற்கண்டெடுத்தபோர்வை எனதுதாய்வீட்டிலிருக்கும்பொழுது எப்போதும் தலையிலணிந்திருப்பதாகும் இங்கு காணப்படும் அடிகள் எனது தாயாருடையதாகவும் அந்தஸ்பானியனுடையதாகவும் காணப்படுகின்றது இவைகளை ஆலோசித்துப்பார்க்கும்பொழுது கொலைப்பாதகனாகிய அந்தஸ்பானியனால் என்னை ஈன்ற அரியமாதாவுக்கு ஏதோ பேராபத்து நிகழ்ந்துவிட்டதுபோலும் நான் என்செய்குவேனென்று அழுதுபுலம்பிக்கொண்டு மயக்கமும் பித்தமும்பிடித்தவன்போல விரைவாகக் குறித்த அடிகளைப் பின்பற்றிச்செல்ல அவை நடுக்காட்டுக்குட் கொண்டுபோய்விட்டது. மாலையும் நெருங்கியது. இவன் இன்னும் சிறிதுதூரம் சென்றுபார்க்கும்பொழுது பயங்கரமும் ஆச்சரியமும் கொள்ளக்கூடியதாகிய ஓர் காட்சியைக்கண்டான்.

இங்ஙனம்,
சோ. சிவஞானசுந்தரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜாவாத்தீவு.

இது குடிகள்நெருங்கி வசிக்கப்பெற்று, நீர்வளம் நிலவளம் மிகுந்து செழிப்புற்று விளங்குமொருதீவு. இது இப்பொழுது உலாந்தரசின்கீழுள்ளது. 500 வருஷங்களுக்குமுன் இந்துராஜாக்கள் அரசுபுரிந்திருந்தனர். இங்கே இந்துதேவாலயங்களும் பௌத்தாலயங்களும், வடிவழகுகுன்றாது இன்றுங்காணப்படுகின்றன. புறமதத்தருடன் போர்புரிதல், ஆலயங்களை இடித்து விக்கிரகங்களைப்பொடிபொடியாக்கல் முதலிய குணங்களற்ற மகம்மதிய ஜநங்களால் நெருங்கப்பெற்றது. இவர்கள் வார்த்தையில் வடமொழிக்கலப்பும், ஒழுக்கத்தில் இந்துக்களின்பழக்கவழக்கங்களும் இன்னும் காணப்படுகின்றன. இவர் துன்பச்சுவைநுகர்ந்தறியாதயங்கலவாழ்வினையுடையோர். தெருக்கள் மிகவிசாலம். நகரின்நடுவேபெருவெளியும் பசும்புல்வளர்ச்சியும் மரச்செறிவும் மிக அழகாயிருக்கும். இப்பெருவெளியினைச்சூழ செல்வர்களது மாடமாளிகைகளின்வரிசைகள் விளங்குகின்றன. தோட்டமில்லாத வீடுகளே இல்லை. மூங்கில் வேலியில்லாத தோட்டமேயில்லை. மாதமழைகுறைவதில்லை. மழையிலாநாளுமில்லை. அதிகமழையால் நட்டமுமில்லை. நீர்ப்பிரவாகம் அணைகளாலும் கால்வாய்களாலும் சிறைசெய்யப்பட்டு நன்றாகப்பயிருக்கு உபயோகப்படுத்தப்பட்டுவருகின்றது. விசேஷமாய் நெல்லும் கரும்பும் பயிரிடப்படுகின்றது. சர்க்கரைக்கு இத்தீவு ஒருபிரபலபூமி. தேக்கமரம் இவ்விடத்துமிகவதிகம். இவ்வளவு செழிப்பிற்குக்காரணம் உலாந்தாவரசினரேயாம். இவ்வரசினர் அந்நாட்டிலிருந்த அதிபதிகளுக்குப் பொருள்கொடுத்து வசப்படுத்திக் கலகம், திருடு முதலியவற்றை வேரோடுங்களைந்துவிட்டார்கள். இப்பூமியில் இப்பயிர் இவ்வளவுகருக்குறையாமல் விளைவிக்கப்படவேண்டுமென்றும், விளைந்தனவற்றை அரசாட்சியாருக்கே இன்னவிலைக்குவிற்கவேண்டுமென்றும்பிரமாணங்கள் உண்டு. இதனால் வெற்றுநிலமத்தீவில் இல்லை. கூலி இந்தியாவினுமதிகம். வேலையில்லாக்கூலிக்காரருமில்லை. செலவு இந்தியாவிற்போலத்தான். பிறதேசங்களுக்குக்கூலிக்காரர் போவது அரசினர்க்குடன்பாடில்லை. பூமியினுடைமையாளர் அரசினர். அவரால் செய்வோரின் சக்திக்கேற்பப்பிரித்துக்கொடுக்கப்பட்டு, தீர்வை எடுக்கப்படும். ஒருவன் தனக்குக்கொடுக்கப்பட்டநிலத்தை நன்றாகப்பயிரிடானாயின், அந்நிலம் மற்றொருவனுக்குக்கொடுக்கப்படும். குடியானவனுக்கு; பூமி அநுபோகவுரிமைமாத்திரமே இருத்தலால் பூமியை அடகுவைக்கும்வழக்கம் அத்தீவிலில்லை.

மகம்மதுசமயநூல்விதிப்படி, அதிகவட்டிவிரோதமானதால் அக்கொடுமையுமங்கில்லை. விவாகமரணச்செலவுகளுக்கு அரசினரே குடிகளுக்குதவி அற்பவட்டியுடன், விளைவின்பின்வாங்கிக்கொள்ளுகின்றார்கள். சிவில்கிறிமினல் வழக்குகளுக்கு, நியாயதுரந்தரர்கள் அங்கில்லை ஆதலால் குடிகளின்பணம் வீணாகச்செலவழியும் பெருவழி அடைக்கப்பட்டிருக்கின்றது. பிரமாணங்கள் மிகவுஞ்சாதாரணமானவைகள். ஆதலால் குடியானவன் எளிதில் அறிந்துகொள்ளலாம். கொலைவழக்கொழிந்தனவற்றிற்கு அப்பீலில்லை. சட்டப்புத்தகக்குளியல்களுமங்கில்லை. அரசாங்கவிஷயம் தேசபாஷையிலேநடைபெறும். ஆகவே அரசாங்கபாஷைகற்பாருமில்லை. கற்கவேண்டிய அவசியமுமில்லை. பிரைமரி, செக்கண்டரிபடிப்பேயன்றி, சர்வகலாசாலைப்படிப்பில்லை. விசேஷிகளானபிள்ளைகளை உலாந்துக்கு அனுப்பிசர்வகலாசாலையில் கற்பிப்பார்கள். சாமானியப்படிப்பு முடிந்தவுடன், கைத்தொழில் விவசாயம், வைத்தியம் கற்பிப்பதுவழக்கம். மோட்டார்யந்திரங்களைச்செலுத்துவதில் இத்தீவினர்க்கொப்பயாவருமில்லையாம். சிங்கப்பூர் முதலியஇடங்களில் இத்தொழிலால் நல்லசம்பளம்பெறுகின்றார்கள். இத்தீவின் வழக்கங்களை எண்ணி மற்றவைகளோடு ஒப்பிட்டுப்பார்க்க வேண்டுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைக் குஷ்டரோக வைத்தியசாலை.

சென்றமாதம் இவ்வைத்தியசாலைக்கு நாம்சென்றிருந்தோம். பார்த்தவுடன், நம்மவர்தருமஞ்செய்தற்கிதனிலும் சிறந்தன பிற இல்லையென்னுந்துணிபு உண்டாயிற்று. இவ்வைத்தியசாலை கொழும்புநகருக்குப்புறம்பே களனிகங்கையின்நடுவே அமைக்கப்பட்டிருக்கின்றது. இதில் சாதிமதபேதங்களையுடைய ஆடவர்களும் பெண்களுமாக நோயாளர்நானூற்றுவர்வரையில் இருக்கின்றார்கள். இவர்களின்நிலைமை, கண்டவர்மனத்தைநெக்குருகச்செய்யாமல் ஒருபோதும்விடாது. இவர்கள், நோயினால் அதிகம்வருந்துவோரும், ஒருசிறிதுவருந்துவோரும், நோயின்றோற்றமாத்திரமுடையோருமாகப் பலதிறத்தினராவர். இவர்களுக்குத்தெய்வப்பிரதிநிதியாகி அருளுருக்கொண்டாலொத்த இலங்கை அரசினரால் உணவும் உடையும் இன்னும்வேண்டுவனபிறவும் நியமித்தகாலங்களிற்றவறாது மேலதிகாரபுருஷர்பரீக்ஷையோடு கொடுக்கப்படுகின்றன. ஆயினும் இந்நோயாளர் சாங்காறும் இங்கேயே இலங்கையரசினரால்காவல்செய்யப்பட்டு, இப்பிரபஞ்சபந்தமகற்றி, சதாகடவுட்டியானஞ்செய்து, தந்தேகபரித்தியாக காலவெல்லையை நோக்கியிருக்கவேண்டியவர்களாயிருக்கின்றார்கள்.

இவ்வைத்தியசாலையில், இவர்கள் பகவத்பக்திசெய்தற்பொருட்டு, ஒரு புத்தாலயமும் இரண்டு கிறிஸ்தவஆலயங்களுங்கட்டப்பட்டிருக்கின்றன. இந்நோயாளர்களுள்ளே சைவசமயத்தவர்களும் பலரிருக்கின்றார்கள். இவர்கள்பொருட்டு ஒரு சைவாலயமும் இல்லாதிருக்குமது மிகவும் விசனிக்கத்தக்கது. நம்மவர்களுள் எத்தனையோகோடீசுவரர்கள் கொழும்பிலிருந்தும் இக்குறையை நிவிர்த்திசெய்யாது அலட்சியஞ்செய்தகாரணம்யாதோ நாமறியேம். ஆதலால் இங்கே விக்கினேசுவர ஆலயம்ஒன்று பிரதிட்டைசெய்வது அத்தியாவசியமென்பது எமதுவேண்டுகோள். எனினும் சைவநன்னூன்மெய்மையுணர்ந்துளோர் உள்ளக்கிடக்கை எவ்வாறுமோ என்னும் எண்ணமும்வேண்டியது. எவ்வாறாயினும் சந்திகடோறும் மும்மூன்றுகோயில்கள் இருப்பவும் மேலுமொன்றுகட்டுவிப்போர், யோசித்தாயினும் இங்கே இத்தருமத்தைச்செய்தல், எம்மையினும் பேரின்பந்தரும் பெரும்புண்ணியத்திற்கேதுவாகுமென்பதிற்சந்தேகமில்லை.

இந்நோயாளர்களுள்ளேசிலர் காவல்கடந்து மறைந்துபோகாதிருத்தற்பொருட்டும் தம்முட்கலகம்விளைக்காதிருத்தற்பொருட்டும் இங்கே போலீச்உத்தியோகஸ்தர்கள்வசிக்கும் கட்டிடமொன்றுண்டு. இவ்வைத்தியசாலைவைத்தியர். யாழ்ப்பாணம்வண்ணார்பண்ணை. ஸ்ரீ. A. நடராஜாஅவர்கள். இவ்வுயிர்ப்பாதுகாவலர், இவ்வுலகியலுட்பிரவேசித்து, துன்பத்தின்சுவைகாணப்பெறாத இளைஞராகவும், இவர் இங்கேகாட்டுங்கருணையும், பொறுமையும்நடத்திவரும் அடக்கமும் ஒழுங்குகளும் மிகப்பாராட்டற்பாலன. ஏனைவைத்தியர்களுடன் ஒப்பிட்டுப்பார்ப்பின் இவ்வைத்தியஉத்தியோகஸ்தர் குணநலம் நன்குவெளிப்படும்.

இங்குள்ள நோயாளர்கள் வாசித்தற்பொருட்டுப்பத்திரிகைகளும் புத்தகங்களும் இவ்விஷயமறிந்து எல்லாப்பத்திராதிபர்களாலும் நூலாசிரியர்களாலும் அனுப்பப்படுகின்றன. இந்தியாவினின்றும்வருவன அளவிறந்தன.

கொழும்பினின்றும் பலபிரபுக்கள் இங்கேவந்து பலவகைப்பட்ட தருமங்களுஞ்செய்கின்றார்களென்றும், இவர்களுள் சைவசமயத்தினர் ஒருவராயினுமிலர் என்றும் ஒருவர் சொல்லக்கேட்டோம். அஃதுண்மையாயின் ஐயையோ, அதுமிகவும் பரிதபிக்கத்தக்கதேயாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கேஇன்னுமொரு அற்புதம், திருவருளின்செய்தியால் இந்நோயாளருக்கு க்ஷவரஞ்செய்துவரும் நாவிதர்களுக்கும், பல்லாண்டுகளாக இவர்களணிந்துள்ள ஆடைகளைவெளுக்கும் வண்ணார்களுக்கும் இக்குஷ்டரோகம் சென்றுபற்றாமையேயாம்.

இதனைவாசிக்கும் நஞ்சைவசமயப்பிரபுக்களே. இங்கே ஒரு சைவாலயப்பிரதிட்டைசெய்வதும், இவர்கள்பொருட்டு நம்மாலியன்றளவு பொருளுதவிசெய்துவருவதும், மிகமேலாகியபுண்ணியமாய்க்கடவுளின்றிருவருளுக்கு உங்களைப்பாத்திரமாக்கிவிடும் என்பதைத்துணிந்து கூறுகின்றேன். அன்றியும் நீங்களொவ்வொருவரும் காலங்கிடைக்கப்பெறின் இவ்வைத்தியசாலைக்குப்போய் உங்கள் கண்களால் ஒருமுறைபார்க்கவும் வேண்டுகின்றேன். இவ்வைத்தியசாலையினைநடத்திவரும் எம்மரசினர் எம்மவர்க்குக்காட்டுமிக்கருணைக்கு நாமென்றுமவரின் மகாமகத்துவத்தைவாழ்த்தி அவர்செங்கோலும் தண்ணிழலும் நீடுநிலைநின்றுவாழ எம்முழுமுதலை வேண்டுகின்றேம்.

## நஞ்சுவிழியரவு.

இது பாம்பினங்களுள் மிகக்கொடியது. இதற்கு நஞ்சு கண்ணிலுண்டு. இது விழித்து நோக்கும் பார்வைக்கெதிர்ப்பட்டோர் இறந்து விடுவர். இது வடமொழியில் "திருஷ்டிவிஷம்" எனப்படும். திருஷ்டி - கண். விஷம் - நஞ்சு. தமிழில் அது "திட்டிவிடம்" என்றாகும்.

"எட்டிருநாளிலிவ்விராகுலன் றன்னைத்
திட்டிவிடமுணும்"

'அழற்கணுகமாருயிருண்ண." அழல் - நஞ்சு.

"நஞ்சுவிழியரவினல்லுயிர்வாங்கி."

என்பவை சங்கநூல்.

இன்னும் கௌதமபுத்தன், திருஷ்டிவிடமென்னும் பாம்பின் வடிவாயவதரித்தகாலத்திலே, அப்புத்தன், தான் கண்களைத்திறந்தால், உயிர்கள் இறந்தொழியுமென்பது கொண்டு, அதற்குப்பயந்து கண்கள் விழியாதுகிடந்தனன் என்று வரும் நீலகேசித்திரட்டினாலுமிது விளங்கும்.

அன்றியும் நூலாசிரியர் கம்பர்

"கண்கிழித்துமிழ்விடக்கனலராவரசு"

எனத்தாடகைவதையிலும்,

"திட்டியின்விடமன்னகற்பின்செல்வியை
விட்டிலேயோவிதுவிதியின்வண்ணமே.

எனக்கும்பகர்ணன்வதையிலும் கூறிப்போவர்.

விஷவைத்தியநூலோர், இப்பாம்பினத்தைப்பற்றிக்கூறி, இதன்பார்வைக்கெதிர்ப்படின், அசாத்தியமென்றும், இதன் நோக்குளேழுவகைப்படும் என்றும் முதன் மூன்றுவகைகளும் சாத்தியமென்றும், ஆண்டும் மந்திரமொன்றே உபயோகிக்கலாகும் என்றும், கூறி, அதற்கு மந்திரமும், வேறு விதந்தெடுத்தோதிவிதிப்பர்.

நஞ்சின் வேகம், பார்வையிலுஞ் சாருமென்பதற்குச் சகோரமென்னும் பறவையேதக்கசான்றாம். விடத்தைக்கண்டவுடன், சகோரப்பறவையின் கண்கள் சிவந்து காட்டுமியல்புடையன வென்றும், இவ்விடசோதனையின் பொருட்டு அரசர்கள்சகோரப்பறவைகளைவளர்க்கவேண்டுமென்னும் "காமாந்தகம்" என்னும் நூலிலே சொல்லப்பட்டிருத்தலானும் இதனுண்மையறியலாகும்.

## கொழும்புமுகத்துவாரம்
## சர்வார்த்தசித்திவிநாயகராலயம்

கொழும்பு முகத்துவாரத்திலே, சமனிகங்காசாகரசங்கமதீரத்திலே, பிரணவரூபியாகிய பரம்பொருள், சர்வார்த்தசித்திவிநாயகர் என்னுந்திருநாமத்தோடு கோயில்கொண்டெழுந்தருளியிருக்கின்றார். இவ்வாலயத்தில் அகிலாண்டேசுவரீசமேதராய் சம்புகேதீசுவர மூர்த்தியும், சிவகாமிசமேதராய் ஸ்ரீ. நடராஜப்பெருமானும், சுப்பிரமணியக்கடவுளும், சமயாசாரியர் நால்வரும் எழுந்தருளியிருப்பர். அன்றியும், நவக்கிரகப்பிரதிட்டையுமுண்டு. சம்புகேதீச்சுவரரென்றதிருநாமத்திற்கேற்பத் திருவானைக்காவிற்போலச் சுப்பிரமணியவாலயத்தின் கர்ப்பக்கிருகத்தின் கீழ்நிலத்தினின்றும், நன்னீரூற்றொன்று, உற்பத்தியாகி வேனிற்காலங்களிற் சிறிது குறைந்தும், மற்றைக்காலங்களில் நன்கு மேலெழுந்து பிரவாகித்தும் காணப்படுமற்புதம் மிகவும்பத்திகரமாயுள்ளது. இங்கே அதிவிசித்திரமான இந்திரவிமானமொன்றுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனையசில உத்தியோகபுருஷர்கள்போலாகாது, தமதுத்தியோககாலமொழிந்தகாலங்களிலே சிவஞானசித்தியார்முதலாயுள்ள பதிநூலாராய்ச்சிசெய்து தத்துவப்பொருட்சுவை கண்டுளோராதலால், தமிழ்ப்பாஷையிலும் அதனைவல்லார்பாலும் பேரபிமானங்கொண்டுள்ளவரும் மதுரஸ்வங்கிச்சிறப்பருமாகிய. ஸ்ரீமான். T. சொக்கநாதபிள்ளையவர்கள் இவ்வாலய ஆதீன அதிபதிகளாவார்.

இவர்கள் ஞாயிற்றுக்கிழமைதோறும் கோயிலைவந்துபார்த்து விசாரணைநடத்தி, உரியாற்குரியவற்றைச் செய்து, சைவாகமவிதிமுறைதவறாது நித்தியநைமித்திகங்களை நடத்திவருகின்றார்கள். இக்கோயிலிலேபூசைசெய்துவரும் ஆதிசைவப்பிராமணர்கள் குடும்பசகிதமாகவாசஞ்செய்வதற்கு இவ்வாலயத்தின் ஒருசார் அக்கிரகாரப்பிரதிட்டையொன்று இருப்பின் அது மிகநலமாமென்பது பெரியோர்கள் துணிபு என்பதனைத்தருமகர்த்தரவர்களுக்கு நாமறிவிப்பது மிகை.

---

திருநல்லூர்

## வெள்ளியந்திருமலைகிழார்.

சிதம்பரம் கைலாசபிள்ளை என்னுமியற்பெயர்கொண்டுள்ள இப் புலவர்பெருமான், யாழ்ப்பாணத்திலே நல்லூரிலே அவதரித்து. தங்குலத்தியல்குணங்களாகிய பிரபுத்துவமும் தமிழ்ப்புலமையும் வாய்க்கப்பெற்றுடையோர். நான்கொழும்பிலிருந்தகாலத்தில் எனக்குத்தமிழறிவுறுத்த நல்லாசிரியருமாவர். இவர் தமிழ்மொழிப்புலமையோடு, அதுசிறப்பதற்கு இன்றியமையாது வேண்டப்படும் வடமொழிப்பயிற்சியிலும் பூரணபாண்டித்தியமுடையோர். இராசாங்க உத்தியோகபுருடலக்ஷண வேடத்துள்மறைந்து, எவர்க்கும் வெளிப்படும் சாத்வீக குணவடிவு. பஞ்சின்மெல்லடியாள் பாகமல்லாதுயாவு மஞ்சலித்தறியாச்செங்கையாளர். ஸ்ரீமான் பொ. பாண்டித்துரைச்சாமித்தேவரவர்கள் நான்காம் சங்கங்கண்டிரீஇயின செய்திகேள்வியுற்று. மேலெழுமாராமைமிகுதியால் "போற்றுகம்வம்மே போற்றுகம் வம்மே" என்றுபுலவர்களை ஆற்றுப்படுத்திய அருந்தமிழ்ச்சுவைதானேயாகிய தன்மையாளர். புறநானூறு, பத்துப்பாட்டு. முதலியசங்கநூல்களிற்காணப்படும் சொன்னயமும் பொருணயமும் ஒருங்குதோன்ற அதேவனப்பும்பிறவும் அமைய அகவலியற்றுந்தெய்வப்புலமை இயல்பாகத்திருவருள் காட்டக்கிடைக்கப்பெற்றுள்ளவர். அகவலை, அதற்குரிய இன்னோசைமுறைபிறழொழுக்கம் குறிகொள்ள இவர்கள்படிப்பது, கேள்வியாற்றோட்கப்பட்ட செவிகளுக்கூற்றுமோரமிர்ததாரையைநிகர்க்கும்.

இவர்கள் முன்னொருகால் இந்தியாவில் இருந்தபொழுது தாம்பாடிய வடதிருமுல்லைவாயில் மும்மணிக்கோவையென்னும் பிரபந்தத்திலுள்ளசில பாக்களை, அந்நாள், திருவாவடுதுறை மகாசந்நிதானம். ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிகமூர்த்திகள் திருச்செவிசாத்தியபொழுது.

"அநாஅன்று ஒரோவொன்றுணர்வே விராவுதாவரக்கும்.

ஐயநின்னொருளளித்தனையன்றே
சொற்றங்குடியிலரும்பெறலுற்ற
சிறுமுட்புதலிதற்குறுசான்றுமே.

என்னுமிவ்வடிகளை, மீட்டுமொருமுறை படிக்குமாறுகட்டளையிட்டு மிகவியந்தருளினார்கள். தமிழ்நாடுமிகவுங்கடமைப்பட்டு நன்றிபாராட்டற்குரிமைகொண்டுள்ள செந்தமிழ்ப்புலவர் செம்மல் மகாமகோபாத்தியாயர். பிரமஸ்ரீ. வே. சாமிநாதையரவர்கள் இந்நிகழ்ச்சிகளையெல்லாம் உடனிருந்துகண்டவர்களாதலா விதற்குச்சான்றெனநிற்பார்கள்.

ஐயரவர்களுக்கு, "மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு" எனநாமமிட்டு அவர்களியற்றிய தொகைநிலைப்பிரபந்தங்களை ஒருங்குசேர்த்து அச்சிட்டுவெளிப்படுத்துமதனைப் பொருளாகக்கொண்டதொரு அகவற்பாவால் ஞாபகபத்திரமொன்று விடுத்து அதனைவெளிவரச்செய்தவர்களுமிவர்களேயாவர்.

இன்னும், ஐயரவர்கள் தாமச்சிட்டுவெளிப்படுத்துவனவற்றிலெல்லாம், ஒவ்வொருபிரதி "திருநல்லூர், வெள்ளியந்திருமலைகிழார்" கொழும்பு என்று பொன்னிறவக்ஷரங்களாற்றீட்டி, இவர்களுக்குஅனுப்பிவருவதைநாங்கண்டுளேமாதலால், ஐயரவர்கள் பாராட்டிவரும் புலமையின்பழைமையொடுகூடிய நண்பின் செறிவினை நாமெல்லாம் அநுமானிக்கலாகும்.

இத்தகைப்புலமையாளருக்கு. மகாமகோத்தம சக்கரவர்த்தியாரது ஜெனனதினக்கொண்டாட்டத்தன்று, இலங்கைத்தேசாதிபதியவர்களால் இராசவாசமுதலியார் (*Mudaliyar of the Governor's Gate*) என்னும் சிறப்புப்பெயர் கொடுக்கப்பட்டது. இஃது இந்தியவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னாலளிக்கப்படும். "ராயவ்பகதூர்., என்பதனெடொக்கும். நெடுங்காலம் முறைபிறழாது உத்தியோக பாரம்பொறுத்துய்த்தமையாலும், தோன்றி விளங்கிய குலங்குடி ஒழுக்கங்களுடைமையாலும், நிரம்பியதமிழ்ப்புலமையாலும், இது அளிக்கப்பட்டதெனத் தேசாதிபதியவர்களே எடுத்துக்கூறினரென்றால் நாமினிக்கூறுவதென்னை.

"கல்விசேர் மாந்தரினிறைஞ்சி" என்றதற்கேற்ப, யார்மாட்டும் பணிவுடைமையும், தமிழ்ப்புலவர்பாலன்பும், செல்வர்க்குச் செல்வியெளியராய் முகமலர்ந்தினிதுரைவழங்கும் மாண்பும் தென்சொற்கடந்து வடசொற் கலைக்கெல்லை தேர்தலும் ஆகிய அணிகலன்கள் நீங்காப்பெற்றிமையுடையாருக்கு எவ்வெவைகூறினுமவையெல்லாந் தகுதியினுரியனவாவனவன்றி உபசாரமாகா.

இவர்கள்செய்யுமகவலிற்காணப்படும் சங்கநூற்பாஷாகதியினை விளக்கச் சிலஅடிகள் காட்டப்படுகின்றன.

வள்ளிலைவெள்வேல்வலன்றிரியவுள்
வள்ளியெங்குமரியைமெல்லக்கள்ளிய
குமரற்றகையகோலத்தோர்குரிசில்
கொடுவரிவெளில்வார்குரற்புனத்தேனத்து
வருகுவர்வாளாக்கொருமொழிவழங்கலர்
திரிகுவரானின்றிறந்தேர்பாற்றமோ
மாது நீ மொழிமோவாழிய
யாதுகொறில்லயாஞ்செயற்பாற்றே."

## பெண்கள் கல்வி.

உடன்வந்துதித்தஉத்தமரே!

சிலபெண்கள்பால் குலப்பெருமையும் செல்வச்செருக்கும் குடிகொண்டிருக்கின்றன. அவைகளால் நாயகனை, ஒருமுதல்வனெனக்கொள்ளாது, தாம் நினைத்தவாறே பொருட்செலவுசெய்தும், வேண்டியவர்களை வரவழைத்து வார்த்தையாடியும் தம்மைச் சம்சாரவேசிகாரத்தினமென்று மற்றையோர் பாராட்ட வர்த்தகஞ்செய்யும் வகுப்பினருளொருவராகத் தம்மைப்பதிவுசெய்துகொள்வது பெருமையைத்தருமென்று நடந்துவருகின்றார்கள். இவர்களுள்சிலர், பள்ளிக்கூடத்திற்குப்போவதும், பியானோவாசிப்பதும், கற்பனைக்கதைகளைவாசிப்பதும், அவைகளைப்புதிதாகவெழுதுவதும் செய்து தம்மைக் கந்தருவலோகப்பெண்களென்று மதித்துக்கொள்ளுகின்றனர். இவர்கள் எவ்வாறு எந்தவேஷங்கொண்டு நடிப்பினும், ஆடவர்மனமாகிய நாடகசாலையிலே அரங்கேறி அவருடன் கூடி மானத்தை மறைத்தே வாழவேண்டுமென்பது எல்லாத்தேசங்களுக்குமொப்ப அமைந்தவிஷயம்.

எங்கள்நாட்டில் தக்ககணவனை வரித்தல் பெற்றோர்கடமை. வேற்றுநாடுகளில், பெண்கள் இதனைத் தங்கள்கடமையாகக்கொண்டு பதினைந்தாமாண்டுதொடங்கி, விருந்துசெய்தல், ஆலயத்திற்குப்போதல் கடற்கரையில் உல்லாச உலாவருதல் முதலிய விநோதங்களின் மேல்வைத்து நாயகர்களை வரித்தல் இக்காலநாகரீகமாமென்பதனை அறியின் எங்குலமாதர்கள், எவ்வாறு மனந்துணிவரென்பது ஐயதுசந்தேகம்.

அழகுமுழுவதையும், சங்கிரகிப்பதற்கு எமது நாட்டுப்புருஷர்களுக்கு கண்கள் அத்தனைநீளமும் ஒளியுமில்லை. சங்கீதவோசையினினிமையைக் கிரகிப்பதற்குக்காதுகள் அத்தனை நீளமும் ஆழமுமில்லை. சிலதேவரகசியங்காட்டி, நாகரிகபதவியுயர்ந்து விளங்கும் இத்தேவமாதர்கள் இதனை ஊன்றிச் சிந்திக்கவேண்டுகின்றேம். எந்நாடகத்தில் நாகரீகமுதிர்ச்சியில் மறைந்து எந்தக்கோமாளிக்கூத்தாடினாலும் நாயகனுக்குக்கீழ்ப்படிந்து நடப்பது கடவுளாணை என்பதனையும், உணவு வயிற்றிற்குவேண்டப்படுமென்பதனையும், பின் நாயகனொருவன் வேண்டப்படுமென்பதனையும், பின் காலக்கிரமத்தில், மக்கட்பேறு வேண்டப்படுமென்பதனையும் எவர் மறுத்துரையாடவல்லார்.

நாகரிகம் தோன்றிய நாடுகளிலே குணரூபசவுந்தரியவதிகளும், வருவார் போவாரை உபசரித்துச் சமையல்செய்துபோட்டும், பாயல்விரித்தும், பாதரக்ஷைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடைத்தும் காலங்கழித்தும் வருகின்றார்கள் என்றகதைதயை இக்காலக் கற்பனைக் கதாசிரியர்கள் எழுதாது விடுவது வஞ்சகமென்றுசொல்ல நாவுமெழவில்லையே. தமது சுகதுக்கானுபவங்களை விசாரிக்கப்புருடராயினும் பெற்றோராயினும் வாய்க்கப்பெறுதோர் சிற்சில உத்தியோகத் தானம் வகித்துக்கொள்ளுதல் முறைமையுமாயிற்று. இப்படிச்சிற்சில நாகரிகங்கள் எம்முள்ளே வந்துபரவாமலும், எம்பாலியல்பிலமைந்துள்ள பல சுபலக்ஷணங்கள் வழுவிப்போகாமலும் காப்பது, இக்காலச் சீர்திருத்த ஆசாரப்பாதுகாவலாளர் கடமையாகும் நன்று என்று விரும்பிமேற்கொள்ளுவனவற்றுள் மறைந்திருக்கும் குருத்துள்ளே வண்டுகளிருக்குமோ என்று ஆராய்வதே கல்வியறிவின்பயனாகும்.

இன்னும் எம்மவருட்டோன்றியும், கன்மவசத்தாலும் அற்பச் செல்வச்செருக்காலும் அடக்கமில்லாப் போக்காலும் தான்தோன்றி யீசுவரர்களாகிய சம்சார வியாபார வேசிகாரத்தின சக்கரவர்த்திகளினால், எமது சைவாலயங்களும், சமயவொழுக்கவாசாரங்களும், விரதவிதிகளும், இவர் பால்தடன்வாங்கினோரும், இவர்நாவும் மறைநூன்முறையும் இவர் தோன்றியநாடும் இவர்க்கு நாயகனென்று பெயர்வைத்துக்கொண்டு உயிருடன் நரகமந்தியில் வாழும் பிணரூபமும் படும்பாடு கலியுக புராணத்தின் முதற்படலமாகும்.

நீலாம்பாள்.

## ஞானசாந்தி.

இவையாவுமுணர்ந்த சாந்தியானவள் நாயகனைநோக்கித்தலைவரே அப்பியா...... முதலிலே அவசியமிருக்கவேண்டியதை சொல்லவேண்டுமென்றாள். அங்ஙனம்கேட்ட தலைவர் சொல்லத்தொடங்கினார்.

எனதன்புக்கினியநண்பி! ஆத்மவிசாரமுடையவர்களுக்கு ஆரம்பத்திலே வைராக்கியமொன்றுமட்டுமேயிருக்க வேண்டும். அஃதிருக்கும்பட்சத்தில் சர்வதுக்கநிவர்த்தியே பரமானந்த பிராபத்தியாகிய முத்திநிலையை யடையவழியிதுவாம். தடையேயில்லை. அதுதான் நீ முக்கியமாய்க் கொள்ளத்தக்கது. கவனமாய் ஒருமைப்பாடாயிருந்து கேட்கக்கடவாய்.

வைராக்கியமோ? இவ்வுலக முதல் பிரமலோகபரியந்தமாகிய சகலபோகங்களின் போகத்தையும் பிரமாணயுத்திகளால் தன்சித்தத்தில் அநித்தியமென்றறிந்து அவற்றை காகத்தினெச்சத்தைப்போலச் சித்தத்தினின்றும்விடவேண்டும். தோஷதிருஷ்டியினால் இகலோகபரலோகங்களில் இச்சைவிடுதலெதுவோ அதுவே வைராக்கியமாகும். இவ்வைராக்கியம் யதமானன். வியதிரேகி ஏகேந்திரியம் வசீகாரமென நான்குவகையாம். அவற்றுள் மந்தவிவேகத்திற்கு யதமானனென்றுபெயர் கிரிபுரண்டான்பூண்டின் ஆசிரயத்தால் சர்ப்பத்தோடு யுத்தஞ்செய்கின்ற நடுவித்தைபோல. சற்சங்கசாவகாசத்தால் துர்க்குணங்களைவிடுவித்து நற்குணங்களைக் கொள்வதிலுண்டாகும்பயனெதுவோ அதுவே வியதிரேகமாம். இந்திரியங்களை அடக்குதலாகிய தமமே ஏகேந்திரியமாம் மனத்தை நிக்கிரகஞ்செய்யுஞ்சமத்திற்கு வசீகரமென்றுபெயர். இன்னுமிவைபோல்வன அனேகவைராக்கியங்களுள.

அவையாவையெனில் சாத்திரங்களை கேட்கும்போதுமாத்திரம் நூலிற்சொல்லியவண்ணம் இருக்கவேண்டுமென்னும் பாவகன்மஞ்செய்யவேகூடாது. நிட்காமபுண்ணியமே செய்யவேண்டுமெனவும் சதா பகவத்ஸ்மரணையேசெய்யவேண்டுமெனவும் நினைப்பதெதுவோ அதுவே புராணவைராக்கியமாம். பிரேதத்தைக்கொண்டு போகும்போதுமாத்திரம் இஃதென்னவாழ்வு இஃதென்னசுகம் இதென்னசம்ஸாரம் என்னபுத்திரமித்திரர் எல்லாம் நிட்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரயோஜனம் இப்பிரபஞ்சமோ இந்திரசாலத்துக்கொப்பானதென்று நினைப்பதெதுவோ அதுவே மயானவைராக்கியமாம். பிரசூதவேதனையைப்பொறுக்கமாட்டாமல் புருஷனைப்புணரவேகூடாதென்று உறுதியாய் மனத்தின்கண்ணிட்சயஞ்செய்துகொள்ளும் ஸ்திரிகளைப்போலவும் குடும்பத்தில் ஓர் பிணக்குநேரிடுங்காலத்தில் இநபரபோகங்களிற்றுன்பமன்றி இன்பமணுவளவேனுமில்லவேயில்லையென நிட்சயஞ்செய்தும் இல்வாழ்க்கையைத்துறந்து பேரின்பத்தை அடையவேண்டுமெனக்கருதுவதெதுவோ அதுவே பிரசூதவைராக்கியமாம். ஸம்ஸாரத்தில் குழப்பம்நேரிடில் இவர்களுடன்கூடியிருப்பது கூடவே கூடாது பிரதேசத்தைஅடைந்து தனியனாயிருப்பேனென்னு நினைப்பதெதுவோ, அதுவே சலனவைராக்கியம். தனக்கிடர்செய்தவர்களை வெட்டி இருகூறாக்கவேண்டுமென்றே குரோதங்கொண்டு தான்கோரியதை முடித்து சந்நியாசியாய்ப்போவது மூடவைராக்கியம். இச்சையானபதார்த்தங்களைப்புசித்து போக போக்கியங்களில் மகிழ்ந்து சோம்பலின்றி பகலிரவுமுழன்று எதிர்த்தவர்களைவென்று யாதொன்றுக்கும் அஞ்சாதவனாய் கெர்வமடைந்திருப்பதெதுவோ அதுவே இராக்கதவைராக்கியம். பரமசிவன்றன்னையடைந்த பிரமஹத்தியை விண்டுவாலகற்றிக்கொண்டதால் பகவானே ஆதிதெய்வமென்றும் பிரமவிஷ்ணுக்கள் அடிமுடியைத்தேடிக்காணாததால் பிரமஸ்வரூபமே ஆதிதெய்வமென்றும் எங்களுடைய சமயத்தில் பிரவேசித்துக் காரணகுருவைத்தொழுதவர்கட்கே மோக்ஷசாம்பிராச்சியமுண்டென்றும் தேவதைகளைத்தூஷிப்பது மதவைராக்கியமாம்.

இங்ஙனம்.

மு குருசாமிப்பிள்ளை.

## எமது புராணேதிகாசவியல்பு.

எமது வடமொழி தென்மொழிகளிலே எழுதப்பட்டு வழங்கிவரும் புராணேதிகாசங்களிலே, ஸ்திரீகல்பனைகளும் சிற்றின்பரசங்களும் இடையிடையே விரவியுள்ளனவென்று இக்காலத்தொருசிலர்க்கு அருவருப்புத்தோன்றுவதை அறிந்து எமது அறிவிற்கெட்டியவற்றை ஒருசிறிதுகூறுகின்றோம்.

இவ்வுலகினர் தாம் வருந்தித்தேடிய பொன்னையும் நிலங்களையும் ஒருபெண்பொருட்டிழக்கின்ற செயலைக்காணுதலினால். உலகினர் மண் பொன் இரண்டினும் கொண்டுள்ள ஆசையினும் பெண்ணாசை மிகுதியுமுடையராகின்றாரென்பது பிரத்தியக்ஷம். இதனை அநுபவத்தினால் நம்மினும் பன்மடங்கு கண்டு தெளிந்த எம் நூலாசிரியர்கள். உலகினரைத்தம்வழிப்படுத்தி நன்னெறிகளை உபதேசித்தற்கு ஸ்திரீகல்பனையையே கருவியாகக்கொண்டார்கள். அஃதாமாறு.

உலகினர் விரும்பிமயங்கிக்கிடந்தழுந்திச்சிற்றின்பரசங்களை எடுத்து வருணித்துக்கூறத்தொடங்கவே, தாம்விரும்பியபொருள்களைக் கேட்கப்பெற்றதினால், செவிசாய்த்து ஆசிரியர் சொல்வதைக்கேட்குமியல்புடையராகின்றார்கள். மதுபானஞ்செய்யும் வழக்கமுடையானொருவன், மதுபானமாகாதெனவிலக்கிக் கண்டிக்குப்பேசுமறிவாளர் கூடியிருக்குஞ்சபையின்கண்ணே போயிருந்து அவர்கள்செய்யும் பிரசங்கத்தைக்கேட்கவிரும்புவானா? இல்லையே. பின் அவனை அச்சபையோர் தம்வழிப்படுத்த வேண்டினாராயின், அவனை அழைத்து, மதுபானஞ்செய்வது குற்றமல்ல. பின் அதனை மிதமாகச்செய்வதுநலமென முதல் மதுபானத்துக்குடன்பாடுகாட்டி, அவனை அவ்வளவில் சம்மதிக்கச்செய்தாற்றான், அவன்வந்து இவர்கள்கூறுவனவற்றைச்செவிகொடுத்துக்கேட்க ஒருப்படுவான். அங்ஙனமந்நிலையிலவனைக்கொண்டுவந்துவிட்டு, அப்பொழுது மிதமாகக்குடிப்பது நலமென்பதனைப் பிரசங்கிக்குமிடையிடையே மிதமாக்கிப்படிமுறையே குறைத்துவந்தால் அதினும் நலமாமென்று நாளடைவில் அவன் மனதிற்படியச்செய்து. அதன்பின்தான் இச்செயல் மிகத்தீமையுடையது, ஆதலால் முழுதும் பற்றறக்கடியப்படவேண்டும் என்று வற்புறுத்தல்வேண்டும். அப்பொழுதுதான் அவன் புத்தியில். ஆமாம் இது உண்மையென்றுபடும். இவ்வாறன்றி முதன்முறையிலேயே, மதுபானமாகாதென்றுசொன்னால் ஆருக்குச்சொல்வது. அவன் நின்றுகேட்பானே. ஆத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லால் முதல்அவன்விரும்பியஅதனை உடன்பட்டவர்போலக்காட்டி, அவனைவசப்படுத்தி, அவன்கேட்கத்தொடங்கியபின், மென்மெலநினைத்தகாரியத்தை உட்செலுத்தவேண்டும். இதுதான்நல்ல உபாயம்.

நமது இந்து மத உண்மைகளை அமெரிக்கர்களுக்கு, முதன்முதல் ஸ்ரீ விவேகாநந்தசுவாமிகள் உபதேசிக்கத்தொடங்கியதொடக்கத்தை, ஊன்றிவாசிப்பின் அவர்களுமிவ்வுபாயத்தையே கருவியாகக்கொண்டாண்டனரென்பது வெளிப்படும்.

இதுபோலவே எமது கிரந்தகர்த்தாக்களும் உலகினர்மயங்கி இடையறாயிச்சைகொண்டு சாதித்துவரும் இச்சிற்றின்பத்தை வருணித்துப் பேசத்தொடங்கினார்கள். தொடங்கவே, எவரும் மயங்கி நின்றுகேட்கவும் உடன்பட்டார்கள் "இவ்வாறன்றி, ஆசிரியர்கள் "அரவகலல்குலார்பாலாசைநீத்தவர்க்கேவீடு, தருகுவமென்று வேதஞ்சாற்றியமுதல்வன்" என்றுதொடங்கினால், சனங்கள் இதனையுங்கேட்பார்களா. வேதாந்தசாஸ்திரங்களையும், சித்தியார்முதலிய வீட்டுநூல்களையும் நாங்கற்றால், சம்சாரபந்தங்களில் ஒருகால் வெறுப்புவரினும் வருமென்றுபயந்து அவைகளைக்கல்லாதுவிடுவாரும், அவைகளைக்கற்றலாகாதெனத் தம்புதல்வரைத்தடுப்பாருமின்றுமிருக்கின்றார்கள்.

அன்றியுஞ்சிலஜாவளிகளையும் கீர்த்தனைகளையும் படித்தற்குண்டாகு மூக்கமுமவாவும் திருவள்ளுவர்திருக்குறள் படித்தற்குளவாகின்றனவா. இன்றுந்தமிழ்கற்கும் மாணவகர்களுக்குத்தானும். இராமாயணங்கற்றலிலுள்ள அவாவின் முதிர்ச்சி திருக்குறள்கற்றற்கணில்லையே. இராமாயணத்தில் நூறுசெய்யுள்களுக்குப் பொருள் சொல்லிக்கொடுத்தாலு மிருந்துகேட்கச்சம்மதம். அது தெவிட்டாது. திருக்குறளோ ஐந்துகுறளுமுறையும் விளங்கவைப்பினவர்தமக்கது மிகையென்கின்றார்கள். இதனுண்மையாது.

இவைகளையெல்லாம் நன்கறிந்துள்ள ஆசிரியர்கள், நீதிகளையும், ஒழுக்கங்களையும், தருமங்களையும் ஒருகதைமேல்வைத்துக் கூறத்தொடங்கி ஒருத்திமேலொரு சந்தர்ப்பத்தில் சிற்றின்பரசமூறப்பேசி உலகினரைஇருந்துகேட்குங்குணமுடையவர்களாக்கிவிட்டு, அச்சமயம்பார்த்துச் சர்க்கரையுள் மருந்துபொதிந்துவைக்குமாறுபோல, அவர் வஞ்சிப்புண்டுகிடக்குமவசரத்தில், அவர் அறியாமே உவமைகூறுவார்போன்றும், எதுக்கள் எடுத்துக்காட்டுவார்போன்றும் நடித்து, நீதிமுதலியவற்றை உட்புகுத்தித்தங்கருத்தை நிறைவேற்றுகின்றார்கள். அவ்வாறிடையிடையே செய்யும்பொழுதும் அவர்க்கு அதனைக்கேட்டலில் மனம்வெறுப்புறத்தொடங்குமளவிலதைநிறுத்தி, சூரியோதயாஸ்தமனவருணனைகளும் நாடுநகரவருணனைகளும் என வேறொருஇடத்தில் மனதைமாற்றிச் சிறிது ஆற்றி இன்பமூட்டி மீட்டுந்தங்கருத்தைநிறைவேற்றுகின்றார்கள். இவ்வாறே மாறிமாறி, உலகினரை வஞ்சித்து, வேறொன்று பேசுவார்போலக்காட்டி, விளையாடவே, நீதிமுதலியன தேங்காயினுள் இளநீர்புகுமாறுபோல, அவருக்குத்தெரியாமலே வந்துபதிந்து இடங்கொள்ளுகின்றன. பின் அவர்கள் நாளடைவில் இடையிடையே கேட்கக்கேட்க, பதியியல்பு, உலகநிலையாமை, ஆன்மாவினிலக்கணம், நீதி, அறம், ஒழுக்கம் முதலியன இவ்வாறென்று, அவைகளின்பாயிரத்தை அறிந்தவராகின்றார்கள்.

இவ்வாறிலக்கியப்பயிற்சியால், இந்நிலைமையுற்று பக்குவமடையுமவசரத்தே, மாணாக்கன் இடையிடையே, இவ்வுபதேசமொழிகளிலையமுற்றுச் சிற்சிலவற்றை ஆசிரியனிடத்தேவினவுவான். அப்பொழுது ஆசிரியன் இவைகள் இன்ன இன்ன நூல்களிலே தனித்தனிஎடுத்து விரித்து விளக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லக்கேட்டமாணவனுக்கு அவற்றைக்கற்றறியவவாவும் ஊக்கமுமுண்டாகும். உண்டாகவே அந்நூற்பயிற்சிசெய்து, தருமவியல்புகளையும், சிற்றின்பத்தினிழிவையும், பேரின்பத்தின் உயர்வையும், அதனை அருளும் பதியினியல்பையுமுள்ளவாறறிந்து, பத்திசெய்து வீட்டுபேற்றிற்கதிகாரியாகின்றான். இதுதான் ஆசிரியர்கள் கொண்டஉபாயம்.

இவ்வாறன்றி அவர்கருத்து, அழுந்திய சேற்றினுளின்னுமழுத்தி, சிற்றின்பரசத்தை மிகுவிக்குந்தறுகண்மையன்று. நாம்சேற்றினுள்ளே மேலெழவழியின்றி அழுந்திக்கிடத்தலைக்கண்டு கருணைகூர்ந்து, தாமுமிச்சேற்றினுள்ளே கால்புகுத்தி இறங்குவது தமக்கு அருவருப்பேயாயினும், எம்மைக்காக்குங்கருணைமேலீட்டினால், தாமுமிறங்குவார்போற்காட்டிநின்று, நமக்குமேலெழமனமில்லாமைகண்டு, அச்சேற்றுலகினினிமைதோன்றப்பேசிமயக்கி, இடையிடையே, நன்னிலவளங்களின் தன்மைகளை மறையமறையக்கூறி, அவை எவை என்று நம்மைச்சிந்திக்கும்படிசெய்து, அந்நிலையிலிதுகாண் அவையென்று கைபிடித்துக்கரையிலேற்றி, விடுவதே நூலாசிரியர்களுள்ளக்கிடக்கையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலநூலாசிரியர்கள் சிற்றின்பச்சுவையுடையராய் வேசியர்வீடே, வீடென்றுகருதிக்காலங்கழித்தனரென்று இக்காலத்தார் உதாரணமுங்காட்டுவர். அப்புலவர்கள் செய்கையுமவர்குறிப்பும் யாவையென்று பின்னர்க்காட்டுகின்றோம்.

ஆயின் இச்சிற்றின்பரசங்களைக்கூறி மயக்குமவ்வவசரத்தில் கேட்பவர்களுக்கு அச்சிற்றின்பச்சுவையூற்றெடாதோ என்பதுமொரு ஆக்ஷேபம். அதற்குச்சமாதானம்.

ஒருவரை எதிரெதிராகக்கண்டு, நேரேபேசிக்கொண்டிருக்குங்கால், அவர்புகைப்படத்தைக்காட்டினால், அவர்க்கு அப்புகைப்படம் அவசியமல்ல. அதுபோலச் சிற்றின்பரசத்தினுள்ளேயமுழுந்திக்கிடந்து, அவ்வின்பமெல்லாம் குடிகொண்டு அலைபுரண்டெழுந்துமோதும் பெண்வடிவங்களை நேரே உலகிலேகண்டுகளிக்குஞ் சிறுவர்களுக்கு, ஆசிரியர்கூறுவனவா, அந்தஞாபகத்தை ஊட்டப்போகின்றது.

மூவாண்டு நாலாண்டுப்பிராயத்தாரும் அக்ஷராப்பியாசஞ்செய்யத்தொடங்குமுன், இவ்வப்பியாசஞ்செய்தலைக்காண்டுமன்றே, இவர்க்கெந்நாலநிவினலிச்செய்கையிற்பழக்கமுண்டாயிற்று என்பதைக்கூறுக.

இன்பரசம்மிகுத்துக்கூறுமியல்பினவெனப்படும் சிந்தாமணி, இராமாயணம். என்னுமிந்நூல்களின்கணுள்ள சிலசெய்யுள்களைஎடுத்துக்காட்டுகின்றோம். பின் ஆசிரியருட்கிடையாதாய்முடிகின்றதென்று நிச்சயித்தல் வாசிப்போர்கடனாகும்.

பெண்ணெனப்படுவகேண்மோபீடில
பிறப்புநோக்கா, வுண்ணிறையுடையவல்
லவொராயிரமனத்தவாகு, மெண்ணிப்பத்
தங்கையிட்டாலிந்திரன்மகளுமாங்கே,
வெண்ணெய்க்குன்றெரியுற்றற்போன்மெ
லிந்துபின்னிற்குமன்றே.

இ-ள். பெண்ணென்றுகூறப்படுவனவற்றினியல்பைக்கேட்பாயாக, மனவலியுடையவல்ல, குடிப்பிறப்புக்கெடுமென்றுபாரா, நிறையுடையவல்ல! ஆயிரமுகமாகவெழுமனத்தவாம்; பத்துப்பொருளை அகங்கையிலேயிட்டாற் பொருட்குறைபாடில்லா இந்திரன்மகளேயாயினும்உருகி அவர்பின்னே நிற்குமென்றுனென்க.

மணியெழுவனையதோளும்வரையெனவ
கன்றமார்புந், தணிவருங்கயத்துட்பூத்த
தாமரையனையகண்ணும், பணிவரும்பரிதி
யன்னமுகமுமென்றயர்ந்துசாமப், பிணி
யெழுந்தவலிக்கின்றபேதைநீகேளிதென்று
(ன்.

இ-ள். தோளும், மார்பும், கண்ணும், முகமும் வருத்துமென்றுமயங்கிக் காமநோய்தோன்றி வருந்துகின்றபேதாய்; நீயிங்ஙனங்கருதின இவ்வுடம்பின்றன்மையைக் கேளென்றுனென்க.

போதொடுநானமூழ்கிப்பூம்புகைதவழ்ந்
துமுல்லைக், கோதைகண்படுக்குங்கூந்தல்
குரைவளிபித்தோடைபே, பேதஞ்செய்
மலங்கணெய்த்தோரிறைச்சியென்பிருண்
மூளை, கோதஞ்செய்குடர்கள்புன்றோல்
வழும்பொடுநரம்பிதென்றான்.

இ-ள். நானத்தேமூழ்கிப்புகைதவழப்பட்டுப்போதோடே கோதைதுயில்கொள்ளுங்கூந்தால்; இவ்வுடம்பு ஏதஞ்செய்கின்றவளி வாதம்)யையும், பித்தையும், ஐ (சிலேட்டுமம்) யையும், பொருந்தினமலங்களையும், குருதியையும், தசையையும், என்பையும், ஈரலையும், மூளையையும், பொல்லாங்குசெய்யும் குடர்களையும், தோலையும், நரம்பையும், வழும்பையுமுடைத்தாயிருக்குமென்று கூறினுனென்க.

விழுக்கொடுவெண்ணஞ்சல்லாவுகிர்மயி
ருமிழ்கட்பீளை, புழுப்பயில்யாக்கைபொல்
லாத்தடிதடிகிடந்தபோழ்தின், விழித்தி
யார்நோக்குகிற்பார்பிள்ளையார்கண்ணுட்
காக்கை, கொழிப்பருப்பொன்னிற்றோன்
றுங்கொள்கைத்தாற்கொடியேயென்றான்.

இ-ள். கொடியே! விழுக்குமுதலியவற்றையுடைய புழுப்பயில்கின்ற இவ்வுடம்பு வேறுபட்டுக்கிடந்தபொழுது விழித்துப்பார்ப்பார் ஒருவருமில்லை; இந்த அங்ஙனம் வேறுபடாமையின், விளைகின்றகாமத்தாலே காக்கை கரிக்குருவிக்குப்பொன்போற்றோன்றுங் கொள்கையையுடைத்தாயிற்றுக்காணென்றுனென்க.

வெண்ணிறத்துகிலினங்கண்வீழ்ந்துமா
சாகின்ற, வொண்ணிறவுதிரந்தன்னையு
திரத்தாலொழிக்கலாமே, பண்ணிறக்கிள
வியார்தம்பசையினூற்பிறந்தபாவங், கண்
ணிறமுலையினார்தங்கலவியாற்கழிக்கலாமே

இ-ள். வெண்துகிலிலேவீழ்ந்து மாசாகின்ற உதிரத்தை உதிரத்தாலே போக்கவொண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணாது. அதுபோலக்கிளவியார்தம் (பெண்களது) பற்றினாலே (ஆசை) பிறந்தபாவத்தை அவர்கூட்டத்தாலே (புணர்ச்சி) போக்கவொண்ணாது.

உருவமென்றுரைத்தியாயினிறைந்த
தோற்றுருத்திதன்னைப், புருவமுங்கண்
ணுமூக்கும்புலப்படவெழுதிவைத்தாற்,
கருதுவதங்கொன்றுண்டோகாப்பியக்கவி
கள்காம, வெரியெழவிகற்பித்திட்டாரிறைச்
சிப்போரிதனையென்றான்.

இ-ள். உள்ளொழியப் புறத்தின்வடிவு நன்றென்றுரைத்தியாயின் முற்கூறியவெல்லாம் நிறைந்ததொரு தோற்றுருத்தியைப் புருவ முதலியன நன்றாகவெழுதிவைத்தால் நன்றென்றுகருதுவதோர் பொருளில்லையே, ஆதலின் இறைச்சித்திரளாகிய விதனைக் காப்பியஞ்செய்யுங்கவிகள் மக்கட்குக் காமத்தீயெழும்படி வேறுபடுத்தினார்கள் காணென்றானென்க.

என்பினைநரம்பிற்பின்னியுதிரந்தோய்த்
திறைச்சிமெத்திப், புன்புறந்தோலைப்போ
ர்த்துமயிர்புறம்பொலியவேய்ந்திட், டொ
ன்பதுவாயிலாக்கியூன்பயில்குரம்பைசெய்
தான், மன்பெருந்தச்சனல்லன்மயங்கினா
மருளவென்றான்.

இ-ள் நெஞ்சே; தச்சன் உதிரத்தைத்தோய்த்து நரம்பாலேயென்பினைக் கட்டித் தசையையப்பிப் புன்புமறையத் தோலைப்போர்த்து அப்புறம் பொலிவுபெறும்படி மயிராலேவேய்ந்து ஒன்பதுவாயிலாக்கி நன்றென்று மயங்கினார்மருளக் குரம்பைசெய்தான், ஆதலான், மிகவும் நல்லனாயிருந்தானென்றானென்க.

இவைசிந்தாமணி.

இச்செய்யுள்களை நாம்முன்கூறியவற்றிற்குத்தக்கசான்றாகி. ஆசிரியர்களதுட்குறிப்புநோக்கம் யாதென்பதனை வெளிப்படுத்தும்.

தூமமேகதுபுவிக்கெனத்தோன்றிய
வாமமேகலைமங்கையரால்வருங்
காமமில்லையெனிற்கடுங்கேடெனு
நாமமில்லைநரகமுமில்லையே.

வஞ்சனைபண்டுமடந்தைவேடமென்றே
தஞ்செனமாதரையுள்ளலார்கள்தக்கோர்.

கற்றனர்ஞானமின்றேற்காமத்தைக்கடக்கலாமே.

வன்மையைமாற்றுமாற்றல்காமத்தேதவதிந்ததன்றே.

காலத்தால்வருவதொன்றோகாமத்தாற்கனலும்வெந்தீச், சீலத்தால்அவிவதன்றிச்செய்யத்தானவதுண்டோ.

அந்தரமுற்றானகலிகைபொற்பாலழிவுற்றான், இந்திரனெப்பாரெத்தனையோர்தாமிழிபுற்றார்.

வேதனைசெய்காமவிடமேவிடமெலிந்தாய்.

மங்கையர்பொருட்டாலெய்துமாந்தர்க்குமரணமென்றல், சங்கையின்றுணர்திவாவிசெய்கையாற்சாலுமின்னு, மங்கவர்பொருட்டினாலேயல்லலும்பழியுமாத, லெங்களிற்காண்டியன்றேயிதற்குவேறேதுயாதோ.

இவை இராமாயணம்.

இங்ஙனம் காட்டப்புகின்நூல்முழுதுமிவைபோல்வனவாயிருத்தலினால், காட்ட அடங்கா என்றுணர்க.

அரிசனமேனிநல்லாளணிதுகிலசைவின்சீராற், கரிசனமன்னகொங்கைகாண்டலுந்தளர்ந்தோர்க்காளை, தெரிசனந்தன்னிலீதென்கிந்தையைப்பிணித்ததென்றாற், பரிசனந்தன்னிலென்னாமோவென்றுயிர்பதைத்துநின்றான்.

என்பனபோல்வனவுங் காணப்படுகின்றவாலெனில், நன்று. இவ்விவ்விடங்களிலே ஆழ்ந்தகுழிகளும் முட்புதர்களுமுள, அவைகளை நோக்கெனின்றால் அவைகளைவிலக்கிப்போ என்பது கருத்து. அதுபோல, மணவிழாக்காலங்களினும் திருவிழாக்காலங்களினும், நெருக்கமிகுதியினால், இவைபோன்றன நிகழும். இவைகளிலேமயங்கி இவ்வலைகளிலே அகப்படலாகாது என உலகினரை ஞாபகப்படுத்தி அவ்வழிவிலக்கி நன்னெறிப்படுத்தலே ஆசிரியர்கருத்தென்று கொள்ளவேண்டும்.

சாற்றனைசவினால், ஒருத்தியின் இரகசியமாகிய சிற்சிலவவயவங்கள்தோன்ற, அதனைநோக்கிய வருணன் பிரமசாபமெய்தினனென்று கூறிவைத்ததுமிலக்கியஆசிரியர்களேயாம்.

புராணபடனவியாக்கியானஆசிரியர்கள் இவைகளை நறுக்கிக்கண்டு, சபைக்கெடுத்துரைத்துவருவதுநலமென்பது எமதுதுணிபு (தொடரும்.)

தமிழ்மாணவகன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னபூரணி.

(ககக-ம் பக்கத்தொடர்.)

மங்கையர்க்கரசியானவள் சுமார் ஒருமணிநேரம் பொறுத்து வீட்டினுள்வந்தாள். வெளியே சென்றவமையத்து அன்றலர்ந்த செந்தாமரைப் புஷ்பம்போலிருந்த இவளின் முகமானது மீண்டு வரும்போது கவலையினாலும் சோகத்தினாலும் நிரம்பப்பெற்றவளாய் எங்கே பிள்ளைகள் தன்னைக்கண்டு சந்தேகப்படுகின்றார்களோவெனவஞ்சி ஒருவிதமாகச் சமாளித்து வீட்டினுட்புகத் தனது குமாரன் சகோதரியாகிய அன்னம்மாளுக்குச் சமீபத்தில்நின்று தன்னைக்கண்டவுடன் முன்வாசித்துக்கொண்டிருந்த இடத்துக்குச் சென்றதைக்கண்டு துணுக்குற்றுத் தனது குமாரனைப்பார்த்துக் கூறுகின்றாள்.

மங்கையர்க்கரசி:—மைந்தனே! நீ வாசித்துக்கொண்டிருந்த இடத்தைவிட்டு உனதுசகோதரிபக்கலணுகி யாதுபேசிக்கொண்டிருந்தாய்?

நமசிவாயம்:—அம்மா! வேறொன்றுமில்லை. நான்படிக்கும்பாடத்தில் ஒருசொல்லின்கருத்துவிளங்கவில்லை. ஆகையால் எனதுசகோதரியிடம் அதைக்கேட்கச் சென்றிருந்தேன்.

மங்கையர்க்கரசி:—இல்லை! இல்லை!! நீ கூறியதை நான்நம்பமாட்டேன். எனது செல்லவக்குழந்தாய்! அன்னம்மா! இங்கேவா நீ ஒரு நல்லபிள்ளை அல்லவா ஒருகாலத்தும் பொய்சொல்லமாட்டாயென்பது எனக்கு நன்குதெரியும் உனதுமுன்னோன் உனக்குச்சமீபத்தில்வந்து யாதுகூறினான்.

அன்னம்மாள்:—அம்மா! அவர் கூறியது பொய்யேயாகும். இப்பொழுது சிறிதுநேரத்துக்குமுன் நமதுவீட்டுமுகப்புச் சாளரவாயிலில்வந்து தங்களைவெளியேவரும்படிசைக்கினை செய்து அழைத்துச் சென்றவர் முன்னும் இரண்டோர்முறை இவ்வண்ணமே உங்களைச்சந்தித்துச் சென்றார் என்று கூறினர். இதுவேயன்றி வேறொன்றுமில்லை என்றாள்.

இதைக்கேட்டமங்கையர்க்கரசியானவள் அகம்பதறி நடுநடுங்கிப் பின் சிறிது தேறி இருபிள்ளைகளையும் கட்டிமுத்தமிட்டு எனது அன்பான பிள்ளைகளே! நீங்கள் உங்கள் தந்தையாருக்கு இதைக்கூறவேண்டாம். இதை உங்கள்சிந்தையினின்றும் எடுத்துப்போடுங்கள் என்று இரக்கத்தோடுகூறினள். அப்பொழுது அவளின்கண்களினின்றும் நீர் ஆறுகளோடிக்கொண்டிருந்தது. பிள்ளைகளிருவரும் தங்கள் அன்னையார் அழுதுவருந்திச் சங்கடப்படுவதைக்கண்டு சகியாதவர்களாய் அவளின் காலடியில்வீழ்ந்து கதறியழுது அம்மா! நீங்கள் எதற்காகவருந்துகின்றீர்கள், நாங்கள் ஒருபோதும் தந்தையாருக்கு இதைப்பற்றிக்கூறமாட்டோம் என்று அவளை ஆறுதற்படுத்தினார்கள். காலம் சிலசென்றது.

(இரண்டாம் அதிகாரம்)

அருணாசலம்பிள்ளையின் சிரேஷ்டகுமாரனாகிய நமசிவாயமென்பவன் பாலப்பருவங்கடந்து வாலிபப்பருவத்தையடைந்துவிட்டான். தந்தையார் அவனுக்குத்தம்முடைய நெசவுத்தொழிலைப் பயிற்றிவந்து சிலநாளில் தான்வேலைசெய்யும் சுப்பிரமணியபிள்ளையுடைய கைத்தொழிற்சாலை வேலையாட்களுள் ஒருவனாகச்சேர்த்துவிட்டனர். ஒருநாள் இவர்களிருவரும் கைத்தொழிற்சாலைக்குச் சென்று வேலைசெய்துகொண்டிருக்கும்போது அத்தொழிலுக்கு உபகரணமான ஒரு ஆயுதத்தை வீட்டிலே மறந்துபோய்வைத்துவிட்டுவந்துவிட்டமையால் அதை எடுத்துவரும்படி தன்குமாரனுக்குக்கட்டளையிட அவன் விரைவாகத் தன்வீட்டுக்கு வந்து உள்ளேபோகும்போது அவனுக்குமுன்னே பதினைந்துபார்தூரத்தில் சுமார் எழுபதுவயசுடையவனும் கறுத்த பாரித்த சரீரமுடையவனும் சிகைமுண்டிதஞ்செய்யப்பட்ட சிரமுடையவனும் நரைதோற்றிய அடத்தியான மீசையுடையவனும் கழுத்தில் பித்தளைக்கம்பியில் வெள்ளை சிகப்புப் பச்சைமஞ்சல்முதலிய பலவிதவர்மானமணிகளைக் கோர்த்துக்கட்டியவனும் கையிலும் காலினும் பித்தளைக்காப்பையணிந்தவனும் காவிதோய்த்த ஒரு துண்டைத்தலையிலும் இன்னொருதுண்டை இடுப்பிலும் மற்றொருதுண்டை அங்கவஸ்திரமாக மார்பிலும் கட்டிக்கொண்டவனும் அவ்வூர்வாசிகளான ஒவ்வொருவரையும் விகடமான பிறிதொருபெயரால் அழைத்துப் பட்டினத்தடிகள் தாயுமானவர் முதலியமகான்களுடைய பாடல்களைப்பாடியும் இவைகளைத் தான்பாடலாகமாற்றியும் படித்து மகிழ்ந்துதிரியும் தன்மையுமுடையவனுமாகிய முருகேசு என்னும் பெயருடைய ஒருவன் விரைவாகத் தன்னுடையவீட்டினுள்ளேபோக அவனைக்கிட்டி வழிமறித்துக்கூறுகின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமசிவாயம்:—முருகேசு அம்மான்! நீ உள்ளே எதற்காகப்போகின்றாய் கையிலிருக்கும்கடிதம் எது; ஓஹோ! கறுப்புக்கோடிடப்பட்டிருக்கின்றதே இக்கடிதம் எனது தந்தையாருக்காயின் இங்கேதா நான் கொடுக்கின்றேன்.

முருகேசு:— இதார் எடிபொடிச்சி பொன்னுச்சி! இது உனது தகப்பனுக்கல்லடி இவ்வீட்டெசமானியாகிய உனது தாயாருக்குக் கொடுக்கச் செல்லுகின்றேன் உன்பாட்டிலே நீ போடி பூத்தைப்பெண்ணே.

நமசிவாயம்:— மூளைமங்கலாக்குமுள்ள மூடா! நான் இக்கடிதத்தை அவசியம்பார்த்தல் வேண்டும் இங்கேதா என்று அவனது கையில் எட்டிப்பிடித்தான். அப்பொழுது

முருகேசு:— (சிரித்துக்கொண்டு) இளவட்ட முகிழ்திருக்கி நளவர் கோவணம் பிழிந்த நாச்சமாப்பாணமுதலியாரே! ஆஹா! தாங்கள் இதிற்பிரவேசித்தல் வேண்டாம், சீக்கிரஞ்சென்று சிவன்கோயிற்றிருவாபரணப் பெட்டியோடு கோயிற் றிறப்பையும் பாதுகாத்துக்கொண்டிரும்.

நமசிவாயம்:—(சிரித்துக்கொண்டு அம்மான் சும்மா உளறாதே எங்கே கடிதத்தைத்தா?

முருகேசு:— உன்னிடம் ஒருகாலத்தும் தரேன் என்றனன்.

அப்பொழுது நமசிவாயம் கோபங்கொண்டு விசரா கடிதத்தைத் தருகிறாயா இல்லையா என்று கூறி அவனது கன்னத்தில் இரண்டு மூன்று அடிகொடுத்துக் கடிதத்தைப் பறித்தெடுக்க எத்தனிக்க, அவன் ஐய்யோ முறையோ என்று ஓலமிட்டுக்கொண்டு வீட்டுப்பக்கமாக ஓடிப்போனான். சாளரவாயிலாக இவைகளையெல்லாங்கண்ட மங்கையர்க்கரசி விரைவாக அங்கிட்டு வந்து இவ்விருவருக்கும் இடையே நின்று சண்டைசெய்ய விடாது தடுப்பவள்போலப் பாசாங்குசெய்து தன்னுடையகுமாரன் அறியாமல் தந்திரமாகக்கடிதத்தைவாங்கி வஸ்திரத்துள் மறைத்துவைத்துக்கொண்டு, கடிதங்கொண்டுவந்த முருகேசனுக்குச் சிறிது பொருள் கொடுக்க அவன் அம்மா! பாக்கியலக்ஷுமி பட்டணதேவதை! பரலோகமாதாவே! எனக்கு ஒருசல்லியும் வேண்டாம் அவர் ஏராளமான திரவியம் தந்திருக்கின்றார். சிவன்கோயிற் றிறப்புப்பத்திரம் என்று கூறி மின்போல் அவ்விடத்தைவிட்டு மறைந்துபோனான் இவைகளையெல்லாங்கண்ட நமசிவாயம் பிரமித்து நிற்றலும் அவனின் தாய் தம்பி! உள்ளேவா என்று கூறிச் சென்றுவிட்டனள்.

நமசிவாயம் சிறிதுநேரம் ஆலோசித்துக்கொண்டுநின்று இன்று எவ்விதமும் இவ்விஷயத்தின் இரகசியத்தை அறியாமல் விடுவதில்லை என்று தன்னுட்கூறிக்கொண்டு விரைவாக உள்ளேபோய்த் தாயைச்சந்தித்து அம்மா! இப்பொழுது முருகேசன் ஒருகடிதங்கொண்டு இங்கு வந்து அதை என்னிடந்தராது மறைத்துவைத்திருந்து உங்களிடம் தந்தான். அக்கடிதம் யார் அனுப்பியது? ஆலோசித்துப்பார்த்தால் இதில் ஏதோபரம ரகசியம் இருக்கின்றது. தாங்கள் இதைப்பற்றிய உண்மையைக் கூறாவிட்டால் கட்டாயம் இதைத் தந்தையாருக்குச் சொல்லிவிடுவேன் என்றான். அப்பொழுது மங்கையர்க்கரசி நடுநடுங்கித் தியங்கி மயங்கிச் சிறிது தேறி தம்பீ! நீ இதில் எதற்காகப் பிரவேசிக்கின்றாய் நீயோசிறுபிள்ளை வேண்டாம் சொன்னேன்கேள் என்று மன்றாடினள். அதற்கு நமசிவாயம் முடியாது இன்று எதுவிதமும் தந்தையாருக்கு அறிவித்துவிடுவேன். நான் எனது சிநேகிதர்களோடு கூடிச் சூதாடிவிட்டுவந்தால் சிவகாருண்ணியமில்லாமல் தந்தையாரிடம் கூறிப் பகையுண்டாக்கித் தண்டனைசெய்வித்துவிடுவீர்களல்லவா ஆகையால் நான்கொண்ட தீர்மானத்தை மாற்றமாட்டேன் எனலும் அவள் மைந்தனின்பிடிவாதத்தைக் கண்டு அலறித் துடித்து மயங்கிக்கீழேவீழ்ந்து மூர்ச்சையானாள். அப்பொழுது நமசிவாயமும் அன்னம்மாளும் அவளைத்தூக்கிப் படுக்கையில் வளர்த்திக் குமாரி பலவிதசையித்தியோபசாரஞ்செய்து கொண்டிருக்கக் குமாரன் கைத்தொழிற்சாலைக்கு ஓடித் தாய்க்கு உண்டாகிய நோயின் தன்மையைத் தந்தையாருக்குக் கூறி அவரை வீட்டுக்கு அனுப்பிவிட்டு, அடைந்தார்க்கு அருண்மழைபொழியும் அண்ணலும் சிவகாருண்ணியமே ஓர் சீரியவடிவங்கொண்டுள்ளவரும் ஆயுள்வேதபண்டித சிரோன்மணியும் தருமப்பிரபுவும் அன்னதாதாவும் பொறுமையென்னும் பொன்றாப்புகழுடையவரும் இருமைச்செல்வமும் இயைபுடன் அமைந்த ஸ்ரீலஸ்ரீ. இராமுப்பிள்ளை வைத்தியரிடம் சென்றான்.

அருணாசலம்பிள்ளை குமாரன்சென்றபின் மனச்சஞ்சலத்தோடு வீட்டுக்கு ஓடிவந்து தமதுமனைவியின் பரிதாபநிலைமைக்கிரங்கி வைத்தியரின் வரவுக்கு எதிர்பார்த்தவராய் வெளியே வருவதும் உள்ளேபோவதுமாக உலாவிக்கொண்டிருந்தவர் உள்ளேபோகும்போது மனைவிபடுத்திருந்த கட்டிலின்கீழ்க் கறுப்புக்கோடிட்ட கடிதமொன்று கிட-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்கக்கண்டு சமீபத்திற்சென்று அதை எடுக்கும்
போது அன்னம்மாள் குறுக்கிட்டுப் பிதாவே!
இது தாயாரின் இரகசியக்கடிதமாக்கும் ஆகை
யால் தாங்கள் பார்க்கவேண்டாமென்று தடுக்க
அவர் கோபித்து, அடி, துஷ்டக்கழுதை உனது
தாயாருக்கு இரகசியக்கடிதம் ஆர் அனுப்பப்போ
கின்றார்கள் தூரப்போ என்று அதட்டி அவளை
அப்புறப்படுத்திச் சமீபத்துள்ள சாளரவெளிச்சத்
திற்போய்க் கடிதத்தைத்திறந்து வாசித்தவுடனே
வெஞ்சினநெருப்புமூழ அதைக் கீழேவீசிவிட்டுச்
சிறுபிள்ளைகளையும் கோய்வாய்ப்பட்டிழுனும் மனை
யாளின் பரிதாபநிலைமையையும் பொருட்படுத்தா
தவராய் வெளியேயோடி மின்போல மறைந்து
போனார்.

சிறுதுநேரஞ்சென்றபின் அவ்வீட்டுவாயில் ஒரு
பல்லக்குவண்டி வந்துநின்றது. அவ்வண்டியினி
ன்றும் கனம்பொருந்திய இராமுப்பிள்ளை வைத்
தியரவர்கள் இறங்கிவர அவருக்குப்பின்னால் நம
சிவாயமும் நடந்துவந்தான். எங்கள்வயித்தியரவ
ர்களுக்கு இப்பொழுது அறுபதுவயதாயிற்று இல
க்குமி கடாட்சமுடையவராய்ச்சமதோற்றத்து
டன் பந்துமுழச்சாயவேட்டியைச் சுருக்கிக்கட்டிப்
பட்டுக்கரை அங்கவஸ்திரத்தைத் தோழில்மாட்டி
பழயக்காட்டுத்தலைப்பாகையைச் சிரசிற்சுற்றி ஒரு
கைதச்சேமிப்புச்செப்பு மடியிற்றலங்க வெள்ளிப்பூ
ணமைந்த ஊன்றுகோலைக்கையிற்றாங்கியபடி கா
ணப்பட்டார். பெருந்தகைக்குணநிதியாகிய இ
வர் உள்ளேபோய் அறிவுமயங்கிக்கிடக்கும் நோயா
ளியுடைய கைநாடியைப் பரீக்ஷித்து வழமைபோல
முதுகைத்தடவி மருந்துப்பெட்டியைத்திறந்து ஒர்
மருந்தெடுத்து இஞ்சிச்சாற்றில் அமிர்தப்பாலும்
கலந்து நோயாளிக்குக்கொடுக்கும்படி செய்ய
அரைமணிநேரத்தில் மங்கையர்க்கரசி அறிவுவந்து
எழுந்தாள். சிறிதுநேரஞ்சென்றபின் அவளுக்கு
அகஸ்மாத்தாய்க் கடிதத்தின் எண்ணமுண்டாகத்
தனது மடியைப்பார்த்தபோது முன்பத்திரப்படுத்
திவைத்திருந்த கடிதமில்லாமையினால் மனக்கலவ
ரமுண்டாய்த் திடுக்கிட்டுப் புத்திரியாகிய அன்னம்
மாளிடம் இரகசியமாகக்கேட்க அவள்கடிதம் கீழே
வீழ்ந்துகிடந்ததையும் தந்தையார் எடுத்துவாசித்
தபின் வெளியே ஓடிப்போனதையும் கூறினள்.
இதைக்கேட்டவுடன் மங்கையர்க்கரசி திடுக்கிட்டு
அலறிப்படுக்கையில்வீழ்ந்தாள். அவ்வமையத்திற்
றானே இவளின் ஆன்மாவும் தான்வசித்ததேகத்தி
டம் செலவுவாங்கிவிட்டது. இதைக்கண்ட அவ
ளின் பிள்ளைகள் மயங்கிப்போனார்கள். மலை
கலங்கினாலும் மனநிலைமைகலங்காத எங்கள் வை
த்தியசிரோமணியவர்கள் இப்பரிதாபகாட்சிக்கு

மயங்கினரென்றால் மற்றவர்களைச் சொல்லுவா
னேன். அப்பொழுது வயதுவந்த இருபிள்ளைக
ளும் தாயாரின் பிரேதத்தின்மேல் விழுந்துஅழுது
புலம்பினார்கள். மற்றைச்சிறுபிள்ளைகள் சுகதுக்
கங்களின் விபரம்தெரியாதவர்களாய் அழுதுபுலம்
பும் மூத்தசகோதரர்களைப்பார்த்துத் தேம்பித்தே
ம்பி அழுதார்கள். இக்குடும்பத்தாருக்கு அயலவர்
சுற்றத்தவர்களுடைய பற்றுக்கோடில்லாமையி
னால் குறித்தவைத்தியரவர்கள் ஆறுதற்படுத்தினார்.
அப்பொழுது முன்கடிதங்கொடுத்துச்சென்ற
முருகேசனென்பவன் றோட்டுவழியேபோகும்
போது கொல்லப்பட்டார். எறியப்பட்டார். கொ
ன்றார். எறிந்தார். என்றுகூறிக்கொண்டு ஓடிப்
போயினான். பிரேதத்தைவளர்த்தியிருந்த கட்டி
லின்கீழேகிடந்து பின் தகப்பனாரால்வீசிவிடப்பட்
டகடிதத்தை நமசிவாயம் எடுக்கும்போது அன்ன
ம்மாள் அதைப்பார்க்கவேண்டாமென்று தடுக்க
இருவருக்கும் பதிலாக வைத்தியர் அக்கடிதம் தம்
மிடம் இருத்தல்வேண்டுமென்று வைத்துக்கொண்
டார்.

மற்றைநாள் அருணாசலம்பிள்ளையினுடைய
வீட்டில் பெருந்திரளாகச் சனங்கள்கூடிவிட்டார்
கள். சுமார் பத்துமணியளவில் பொலீஸ்மேதிபதி
கெளரவ மைக்கினீனவர்கள் மரணவிளக்கம்
நடத்தி பிரதானசாட்சியாகிய இராமுப்பிள்ளைவை
த்தியரவர்களுடையவாக்கு நம்பிக்கையின்மேம்பா
ட்டினால் ' இரத்தம் கொதித்து மூளையில் தடித்து
இறந்தாள்" என்றுதீர்மானித்துப் பிரேதத்தைத்
தகனிக்கும்படி உத்தரவுகொடுத்துப்போயினார்.
வேடிக்கைபார்க்கவந்த சனங்களெல்லோரும் செ
ன்றுவிட்டார்கள். வைத்தியரவர்களுடைசெலவி
னாலும் உதவியினாலும் பிரேததகனம்நடைபெற்
றது. ஆதரவில்லாத இவ்வநாதைக்குடும்பத்தின
ர்க்கு வைத்தியரவர்கள் சமாநகருநாதுசெய்த
செயற்கருமஉதவி மிகவும் விசேஷமுடையதே
யாகும்.

வரும்

இங்ஙனம்,

மா. சிவராமலிங்கம்பிள்ளை,

ஆறுமுகநாவலர்வாசிகசாலை,

வண்ணார்பண்ணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமாசாரம்.

கந்தரோடை.

### வித்தியாசாலைப்பிரவேசம்.

யாழ்ப்பாணத்திலே கந்தரோடையிலே ஆசிரியர் ஸ்ரீமான் சி. கந்தையப்பிள்ளையவர்களாலே பெருந்தொகைப்பொருள்கொண்டு இப்போது கட்டுவிக்கப்பட்ட வித்தியாசாலையின் பிரவேசம் இந்த ஆவணி மீ எ உ வியாழக்கிழமை கஉ மணிவரையில் வந்த சுபமுகூர்த்தத்திற் செய்யப்பட்டது. கிரியைகளையெல்லாம் பிராமணகுருமார்கள் கிரமமாகச் செய்து முடித்தார்கள். அப்போது கந்தரோடைவாசிகளும் பிறருமாக வெகுசனங்கள் அழைக்கப்பட்டு வந்தார்கள்.

கோப்பாய்வாசரும், பிரபுவுமாகிய ஸ்ரீமான். அ. நாகநாதமுதலியாரவர்கள் அக்கிராசனபதியாய் வீற்றிருந்துசபையை நடாத்தினார்கள். முதலில் பிரமஸ்ரீ வைத்தீசுவரசாஸ்திரிகளாற் சங்கதபாஷையிலே மங்களாசீர்வாதங்கூறப்பட்டது. பின்னர்த் தேவாரம் படிக்கப்பட்டது. அதன்பின் முதலியாரவர்களாற் பாடசாலைக்கு வேண்டும் விடயங்கள் விரித்துக்கூறப்பட்டன. அதன்பின் அ. குமாரசுவாமிப்புலவர், சி. வைத்தீசுவரசாத்திரிகள், வ. மு. இரத்தினேசுவரையர், ஆசிரியகல்லூரித்தமிழ்ப்பண்டிதர் ச. கந்தையபிள்ளை, ஐயாத்துரைப்பிள்ளை, வே. இராமலிங்கபிள்ளை முதலியோர்களாற் சிலசில குறிப்புரைகள் கூறப்பட்டன. அதன்பின் எமது அருமைத்தமிழாசிரியர் ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப்புலவரவர்களாற் பாடப்பட்ட மங்கலவாழ்த்துக்கவிகள் படிக்கப்பட்டன,

### மங்கலவாழ்த்து.

வெண்பா.

ஐங்கரனைச்சங்கரனையாரியையைவீரவேற்
செங்கரனைநாமகளைச்சிந்திப்பாம்—அங்கிலய
வித்தியாசாலைவிளங்குகந்தரோடையினில்
எத்தினத்துமோங்கவினிது.

ஆசிரியவிருத்தம்.

வேதநெறியந்தணர்கள்பசுக்கள்வாழி
விண்முகில்கள்வாழிபுவிவேந்தர்வாழி
தாதமரும்பொழிற்கந்தரோடைமேவுந்
தகுதிபெறுமங்கிலக்கல்லூரிவாழி
போதகஞ்செய்யாசிரியர்கற்போர்வாழி
புண்ணியநற்பொருளுதவிசெய்துநாளு
ஆதரிக்குந்தருமகுணசீலர்வாழி (ம்
யாதிபிரான்றிருவருளும்வாழிவாழி.

முகூர்த்தவெண்பா.

பொங்குஞ்சயவருடம்புக்கபுரட்டாதியெனுந்
திங்களிருபத்தாறுசேர்ந்தபுதன்—அங்கிலயக்
கல்விப்பெருங்கழகங்கந்தையவாசிரியன்
நல்குஞ்சுபமூர்த்தநாள்.

அதன்பின்னர் யாவர்க்குங் கந்தசந்தன தாம்பூலாதிகளும், தபதியார் முதலியோர்க்குச் சம்மானமுங் கொடுக்கப்பட்டன. ஸ்ரீ. கந்தையபிள்ளையவர்களுடைய, வித்தியாசாலை முயற்சியிலே அதிகம் பிரீதியுடையவர்களாய் யாவரும் தத்தமக்கு ஏற்ற ஏற்ற பொருளுதவிசெய்தார்கள். முதலியாரவர்கள் ஒரு பெருந்தொகை கொடுத்தார்கள். சிலர் மாணவகியமாகவுஞ் சிலசில தொகை கொடுத்தார்கள்.

அன்றிரவு ஸ்ரீமான். கந்தையபிள்ளையவர்களாலே கந்தபுராணபடனம் ஆரம்பிக்கப்பட்டது. பலரும் வந்து கேட்டுச் சபையைச் சிறப்பித்தார்கள். புராணப்பிரசங்கம் நித்தியமும் நடக்கும். இந்த அங்கிலய வித்தியாசாலை விருத்தியடையும் பொருட்டுக் கடவுள் திருவருள் செய்க.

விவாகம்:—பரிதாவி ஞூ. வைகாசி மீ கஎ உ எமதரியகண்பரும், குருசந்திரோதயபத்திராதிபரும், திருமகள்விலாசயந்திரசாலையிலோர்பாகஸ்தரும் வடிவெழுதிற்சேற்ற சாந்தகுணரூபரும், கல்விகேள்விகளில் முட்டுருப்பெரும்பாக்கியசாலியுமாகிய வண்ணைநகர். ஸ்ரீமத். வை. தியாகராஜபிள்ளையவர்களுக்கும். மானிப்பாய் ஸ்ரீ. அம்பலவாணரவர்கள் புத்திரிக்கும் கடிமணமங்கலசோபனம் நிகழ்தலாலே, எம்மனோர்க்கெல்லாம் அந்நாள் நன்னாளாயிற்று. இத்தம்பதிகள் சர்வாபீஷ்டசித்தியும், பண்புடைமக்கட்பேறுமுடையராய் மங்கலவாழ்வுறச்சிவபெருமானைத் தியானிக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியக்கத்தகும்கைப்பழக்கம். ஆஸ்திரேலியா வாசியான ஸால்ட்குவ்ஷில், என்பவர், இங்கிலாந்திற்போய், தன்கைக்கழியால் பலவரியசெயல்களைச்செய்து காட்டுகின்றார். எங்கள்மகோத்தமசக்கரவர்த்தியாரவர்களும் இவரை அழைத்து, வித்தையினருமைவியந்து பலபரிசுகளைக்கொடுத்தார்கள். இவர் 20 அடிதூரத்திலுள்ள குதிரையின் காதுகளில் ஈ புகாதபடி கழியால் விலக்குகின்றார். பெண்ணுக்கு வருத்தமுண்டாகாமல் கழியால் ஆடையை அணிந்து அலங்கரிக்கக்கூடுமாம். இவை போன்ற அரியசெயல்கள்பலவாம்.

குரங்குகளின்விநோதம் :—தென் அமரிக்காக் கண்டத்திலுள்ளகாடுகளில் நதிகளைக்கடத்தற்குப் பாலங்கள்போடுகின்றனவாம். ஒருகுரங்கு நதிக்கரையிலுள்ள ஒரு மரக்கிளையைப்பிடித்துத்தொங்கும் அதன் இடுப்பை மற்றொன்று தாங்கிநிற்கும் இன்னொன்று இரண்டாவதைப்பற்றும். இவ்வாறு ஒன்றையொன்றுதழுவி எதிர்க்கரையிலுள்ள மரத்தைப்பிடிக்கும். கிளைகைக்கெட்டியபின், முதற்குரங்கு தன்கால்களை இரண்டாவதுகுரங்கின் முதுகிலூன்றும். இரண்டாவது மூன்றாவதுமுதுகிலுமாக எல்லாக்குரங்குகளும் கால்களைவைத்தவுடன், குரங்குகள் அவைகளின்மேல்நடந்து அக்கரையை அடைகின்றன அடைந்தவுடன் பாலக்குரங்குகள் ஒவ்வொன்றாய்ப்பிரிந்து அக்கரையை அடைகின்றன. இச்செயல்மிகவியக்கத்தக்கது.

ஜீண்டிமகாராசா :—இவர்கள், கல்யாணமுதலியகொண்டாட்டகாலங்களில், தமதுகுடிகள் 50 பெயருக்கதிகமாகவரவழைக்கப்படாதெனக் கட்டளைசெய்திருக்கின்றார். இதுபோன்றதொன்றிங்கிருக்குமாயின் சுபகாரியங்களில் வீணான விபரீதச்செலவுகளுண்டாகா.

ஐக்கியமாகாணத்தில் ஆகன்ஸ் கோட், என்ற மாது நியாயாதிபதியாயிருக்கின்றார்.

பிரான்சில் சிறுபிள்ளைகளுக்கு கட்டிப்பதார்த்தங்களைக்கொடுப்பவர்கள் அரசினரால் தண்டிக்கப்படுகின்றார்களாம்.

இன்னும் பிரசாவிருத்திகாரணமாக, விவாகஞ்செய்யாதவர்களுக்கு, வரியொன்று விதிக்கப்பட்டிருக்கின்றதாம்.

பிரான்சில் நீஸ்பட்டணத்திற்கும் மோனதேகார்லோபட்டினத்திற்கும் இடையில் ஒற்றைக்கம்பியில் ஓடும்புகைரதப்பாதை போடப்பட்டிருக்கின்றது.

## புத்தகவரவு.

### தோத்திரமஞ்சரி.

இது தோத்திரரூபமாக இயற்றப்பட்டுள்ளதொரு செய்யுட்பிரபந்தம். பாக்கள், விநாயகக் கடவுள், சிவபெருமான், உமாதேவியார், வைரவக் கடவுள், வீரபத்திரக்கடவுள், சுப்பிரமணியக்கடவுள், திருநந்திதேவர், சமயாசாரியர், ஆகியோர்களைத் துதித்து. இன்னோசையோடு, தண்ணென்றொழுகி, பக்திரசம்சொட்ட, எவர்மனதையுங்கரைத்துருக்கும் இயல்புவாய்ந்துள்ளன. அன்றியும் நாலுள் மடக்கினங்களும், யமகவைப்பினியைபுகளும், அவைகள்பிரிந்துநின்று பொருள்தருமினிமையும், அர்த்தபுஷ்டியும், புராணக்கதைகள் வேண்டப்படுமளவும் கொண்டுவந்துகோத்த சிறப்பும். செப்போசைகுன்றாதயமகத்தோடுகூடக்கும் கட்டளைக்கலித்துறைகளும் இலக்கியவாய்பாடுகளும் சில அரிய இலக்கணமுடிபுகளும் இடங்கடோறுங்காணப்படுகின்றன. இந்நூலினருமைபெருமைகளைக்கேட்டுச் சொற்சுவைபொருட்சுவைகளை நுகர்தற்கிக்காலத்தில் தமிழ்நூற்கேள்வியாற்றேறப்பட்டசெவிகளுமில்லை. ஓரோவிடங்களிலிருப்பினுமத்தனை ஆழமுமில்லை என்பதைச்சிந்திக்குந்தோறும் துன்பமுமுண்டாகின்றது. இக்காலம், வசனநூற்குரியகாலமன்றி, செய்யுள்நூற்குரியதொன்றன்று என்பது பல ஆங்கிலங்கற்றபண்டிதர்கள்கருத்தாதலாலும் கற்போர்க்குப்பத்திரசமிகுவித்தலே நூலுசலியபொருளாதலால் செய்யுள்களுக்குப் பொருள்தெரிந்தாலன்றி அக்கருத்து முற்றுறாதாதலாலும், நூலாசிரியரவர்கள், இதற்கோருரையெழுதிவெளிப்படுத்தின், அச்செயல் மிகவும் உபகாரமாயிருக்குமென்பது எமது துணிபு.

இவ்விழுமியநூலை இயற்றியுபகரித்த புலமையாளர், வண்ணைமாநகரம் ஸ்ரீமான், க. வைத்தியலிங்கபிள்ளையவர்கள். இவர்கள், ஸ்ரீலஸ்ரீ. வித்வசிரோமணி. ந. ச. பொன்னம்பலபிள்ளையவர்கள்பால் கேட்டு சிந்தித்துப்போற்றிவைத்துவைத்த தமிழ்நூற்கேள்விமிகுதியுமுடையோர். தாம் தட்டறச்சென்ற நூற்பொருள்களை மற்றையோர்க்கெடுத்துரைப்பதை விடாது நாடோறுஞ்செய்துவருந்தகைமையாளர். உலகினர் நாடும் இருவகைச்செல்வமுமுடையோர்.

இவர்கல்வியாற்றலையும், கடவுட்பத்திமுதலியனவற்றையும் நூலாசிரியர்படத்துடன் கூடிய இந்நூல்தானே வெளிப்படையிற்காட்டும். இதில் ஒவ்வொருவருமொருபிரதிவாங்கி, இச்சபோபகாரமுயற்சியிற்றொடங்கிய ஆசிரியரவர்களை, ஊக்கப்படுத்தி இன்னுமிவைபோன்றநூல்களை வெளிவரும்வண்ணஞ்செய்தல் எம்மனோர்கடமையாகும். இதன் விலை. 25 சதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசிப்பட்டு

# பீதாம்பரங்கள்.

சுத்தமானபட்டு.] [நாணயமான ஜரிகை.

சரசுவ விலைகள்.

பிடித்தமில்லாததைத்

திருப்பிப் பெற்றுக்கொள்ளுவோம்.

மேலே கண்ட பட்டுத் திணுசுகள்

எல்லா நிறத்திலும் கிடைக்கும்

பட்டுச்சேலைகள்:—கசு-முழம் நீளம் உ௰-அகலம் விளிம்பும்முந்தியும் சரிகைவேலைகள் உடல் சாதா விலை ரூபா உ௰ முதல் ௬௰-வரை அதே மாதிரி சேலை உடலிலும் சரிகைப்பூ புட்டா போட்டது ரூபா ௨௰ முதல் க௱ வரை.

ரவிக்கைகள்:—விளிம்பும் முந்தியும் சரிகை வேலைகள் உடல் சாதா ரூபா உ முதல் அ-வரை.

உடலிலும் புட்டா ஜரிகை பூவேலைசெய்தது ரூபா ௩ முதல் ௨௰ வரை.

துப்பட்டாக்கள்:—சு-முழம் உ-இ அகலம் விளிம்பும் முந்தியும் ஜரிகைவேலை உடல் சாதா ரூபா அ-முதல் உ௫-வரை.

அதே மாதிரி உடலிலும் ஜரிகை வேலைகள் ரூபா கசு-முதல் ௫௰ வரை.

சவுக்கங்கள்:—உஇ-முழம் நீளம் உஇ-அகலம் சுற்றி ஜரிகை மூலையில் மாங்காய் ரூபா சு-அ௦ முதல் க௫ வரை.

அதே மாதிரி உடலிலும் பூக்கள்போட்டது ரூபா கூ முதல் ௩௦-வரை.

வேண்பட்டு வேஷ்டிகள்:—சு, எ, அ, கூ-முழம் நீளம் உஇ, உஇ, ௩ முழம் அகலம் சுத்த வெண்பட்டு கோயமுத்தூர் வேஷ்டி மாதிரி சிகப்பு சன்னக்கம்பி போட்டது விலை ரூபா அஇ முதல் உ௦-வரை. அதேமாதிரி வேஷ்டிகள் சிகப்பு சன்னக்கம்பிக்குப் பதிலாக ஜரிகையால் சன்னக் கம்பிபோட்டது ரூபா கஉ முதல் ௩௦-வரை.

ஷெ சவுக்கங்கள் உஇ×உஇ-முதல் சிகப்புக்கம்பிக் கரைபோட்டது ரூபா ௫முதல் அ-வரை. ஜரிகைக்கம்பிபோட்டது ரூபா ௭ முதல் க௫-வரை. ஷெவெண்பட்டு வேஷ்டிகள் ருத்திராக்ஷக் கரை போட்டதும் அதே விலைக்குக் கிடைக்கும்.

பட்டுத்தலைக் குட்டைகள்:—சஇ+சஇ-முழம் சதுரம் வெண்பட்டு ஜரிகை ரூபா க௩ முதல் உ௫-வரை. எல்லாக் கலரிலும் கிடைக்கும் மத்தியில் ஜரிகை புட்டா பூப் போட்டுக் கிடைக்கும்.

சுத்தமான கம்பிளி போர்வைகள்:—சு-முழம் நீளம் ௩-அகலம் எல்லா நிறத்திலும் ரூபா ௫ முதல் அ-வரை.

காஷ்மீர் கம்பளிநயம்சால்வைகள்:—ஷெ அகலநீளம் எல்லா நிறத்திலும் சாதா ரூபா அ முதல் க௫-வரை, பட்டினால் விளிம்பும் முந்தியும் ஜரிகை வேலை செய்தது மூலையில் மாங்காய்போட்டது ரூபா க௦ முதல் ௨௦ வரை. ஜரிகையில் அதே மாதிரி வேலை செய்தது ரூபா கஉ முதல்௫௦-வரை,

உருத்திராக்ஷங்கள்:—சு - முகம் ௩௩ உள்ள மாலை அணா எட்டு முதல் ரூபா ௫-வரை, எ, அ, கூ, க௦, கக, கஉ, க௩, கச, க௫, கசு-முகம் தனி மணிகள் ரூபா ௫ முதல் உ௫-வரை. க௦அ-கொண்ட ஜெபமாலை அணா ஆறு முதல் ரூபா ௫ வரை.

வயிரவர் காசிக்கயிறு:—க-நெ. க௦௦-க்கு ரூபா ௩. உ-நெ. ரூபா உ;௩-நெ. ரூபா உ; ஷெ சிறிது ஆறணா அதிலும் சிறிது நாலணா.

பேண் குழந்தைகள் விளையாடும் பித்தளைப் பாத்திரங்கள் செட்டு:—பித்தளை வெங்கலத்தால் செம்பு, குடம், கரண்டி முதலிய ௩உ-சாமான்கள் அடங்கியது சிறிது ரூபா உ. பெரிது ரூபா ச.

நயம்கஸ்தூரி:—தோலா க-க்குரூபா௩௫.

நயம்பால்காயம்:—சுத்தமானது தோலா க-க்கு அணா உ.

விலை ஜாபிதா இனாமாக அனுப்பப்படும்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய வெளிதேசத்தார் ஆர்டருடன் முற்பணம் அனுப்ப வேண்டும்.

கடிதங்கள் தமிழில் எழுதலாம்.

விலாசம்:—மானேஜர்,

பட்டு பீதாம்பர கம்பேனி, காசி.

*Manager, Silk Petamber Co*

*BenaresCity*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்துஸ்தான் சகாய வீமாச்சங்கம் (லிமிற்றட்)

கஅஅஉ ம் வருஷத்து இந்தியசங்க சட்டப்பிரகாரம் இச்சங்கம் பதிவுசெய்யப்பட்டது.

இதற்கு மூலதனமாக ஒருகோடிரூபா அநுமதிசெய்யப்பட்டிருக்கின்றது.

இதன் தலைமை அதிகாரசாலை கல்கத்தாவிலே டல்ஹவுஸி சந்தி கூ0 ம் நம்பர் கட்டடம்.

சபாநாயகர்

காஸிம்பசார் மகாராஜா மனீந்திரசந்திர நந்திபகதூர்

உப சபாநாயகர்கள்

க. நாட்டூர் மகாராஜா ஜகதீந்தரநாதரூய் பகதூர்.

உ. தீகபட்டியாராஜா பிரமாதநாதரூய்.

இந்தச் சங்கத்தில் நூறுரூபா முதற்கொண்டு எவ்வளவு பெருந்தொகைக்கும் பொருந்திக்கொண்டு அதற்குரிய வீதப்படி கட்டிவரலாம். மற்ற வீமாக் கம்பனிகளைப் பார்க்கிலும், இந்தச்சங்கம் விசேஷ அனுகூலமுடையது. இந்தச்சங்கத்திலே கட்டுகிற காசு சிலகாலங்களிற் கட்டத்தவறினும் நட்டமாகாது. மற்றக் கம்பனிகளைப்பார்க்க இச்சங்கத்தினது கட்டுவீதம் மிகச் சகாயமானது.

எஸ். கே. லோட்டன் அன் கோ
இலங்கை ஏசண்டு
பறங்கித்தெரு
யாழ்ப்பாணம்.


## விளம்பரவேதனம்.

| | | ரூ | ச. |
|---|---|---|---|
| வரி க-க்கு | ... ... | | அ |
| காற்பத்திக்கு | ... | க | 00 |
| அரைப்பத்திக்கு | ... | உ | 00 |
| ஒருபத்திக்கு | ... ... | ௩ | ௫0 |
| ஒருபக்கத்துக்கு | ... | ௬ | 00 |

## பத்திரிகைவேதனம்.

| | ரூ | ச. |
|---|---|---|
| உள்ளூருக்கு ஹு க-க்கு | உ | 00 |
| இலங்கை இந்தியாவுக்கு ஹு க-க்கு ... ... | உ | உரு |
| பினங்கு சிங்கப்பூர் ஹு க-க்கு | உ | ரு0 |
| மோரீஸ் நெட்டால் ஹு க-க்கு | ௩ | 00 |
| தனிப்பிரதி ... ... | | உ0 |

கையொப்ப நேயர்கள் பத்திரிகை வேதனத்தை முற்பணமாகஅனுப்பி உதவி செய்யும்படி வேண்டுகின்றோம்.


கணேசயந்திரசாலையில் விலைக்கிருக்கும் புத்தகங்கள்.

| | ரூ | ச |
|---|---|---|
| திரிகோணசலபுராணம் | 0 | எரு |
| இரகுவம்சம் (செய்யுள்) | க | எரு |
| நல்லைவெண்பாமூலம் | 0 | க0 |
| யாழ்ப்பாணச்சமயநிலை பரிதாபி ஹு | 0 | க0 |
| திருக்கணிதபஞ்சாங்கம் | | உரு |
| வாக்கிய ,, (தமிழில்) | 0 | உரு |
| ஷை (இங்கிலீசில்) | | ரு0 |
| திருவூடல் | 0 | ரு |
| ஆறுமுகசுவாமிவிருத்தம் | 0 | ௩ |
| எட்டிகுடியேசல் | 0 | ௩ |
| நடராசப்பத்து | 0 | ௩ |
| யாழ்ப்பாணவைபவா (அச்சில்) | | |
| சுப்பிரமணியசுவாமிவிருத்தம் | 0 | ௩ |
| தேவாரத்திரட்டு (அ. குமாரசுவாமிப்புலவரவர்கள்தொகுத்தது) | 0 | கஉ |

ஆ. சண்முகரத்தினசர்மா
வண்ணார்பண்ணைப்போஸ்டு
யாழ்ப்பாணம்.

## ஞானப்பிரகாசம். (தொகுதி—க.)

இதன் முதலாம்வருடச் சஞ்சிகைகள் ஒருங்கு சேர்த்து மிகவழகாகக் சட்டடப்பட்ட புத்தகம் விலைக்கிருக்கின்றது. மாணவகர்களுக்குக் கலாசாலைப் பரிசு உபகாரங்கொடுப்பதற்கேற்றது. தபாற்கூலியுட்பட விலை ரூபா 3—00.

ஞானப்பிரகாச ஆபீஸ்,
வண்ணார்பண்ணைப்போஸ்ற்று,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org